# சம்மாந்துறை பிரதேச சபையின் 11 வது பொது கூட்டறிக்கை 2019.01.08

சம்மாந்துறை பிரதேச சபையின் 11 ஆவது அமர்வு 2019.01.08 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

## சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஏ.எம்.எம் நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. திரு. வீ. ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப். ஐ.எல். நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப். எஸ்.எம்.எம். முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப். ஏ. அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. ஜனாப். யூ.எல். அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. திருமதி. ஆர். வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 08. திரு. என். கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப். ஏ.சி. முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப். எம்.ரீ. பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப். ஐ.எல்.எம். மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப். ஏ.எம்.எம் றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப். ஏ.எல்.எம். ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 14. ஜனாப். எஸ். நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. ஜனாப். ஏ. யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி. கே.எம். இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி. எம்.எஸ். சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி. எஸ்.எம். சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 19. திருமதி. கே.எல். சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 20. ஜனாப். வை.பீ.எம். முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

## சமூகமளித்த உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| 01. ஜனாப். எம்.ஏ.கே. முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி. ஏ.எல். நுஸ்றத் பானு | அலுவலக உதவியாளர் |

### கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் இந்த 11 வது சபை அமர்வு 2019 ஆம் ஆண்டுக்குரிய முதல் அமர்வை உரிய நேரத்திற்கு ஆரம்பிப்பதற்கு உதவிய சகல கௌரவ உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி வரவேற்றவனாக,

இந்த அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இந்தக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் பிரேரித்து ஆமோதிக்கலாம்.

### கௌரவ உறுப்பினர் கே.எல் சிஹாமா அவர்கள்:

கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த கூட்டறிக்கையில் 02 மாதத்திற்கு முன்பாக ஹாஜியார் லேனில் உள்ள பாலம் பற்றிக் கூறினேன். என்று வர வேண்டும்.

**தீர்மானம் 01**
சென்ற மாதக் கூட்டறிக்கையினை ஏற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கிழக்கு மாகாணத்திற்கு புதிய ஆளுனராக கௌரவ அல் ஹாஜ் MLAM.ஹிஸ்புள்ளாஹ் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதை நீங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள். அவரின் நியமனத்திற்கு உங்கள் சார்பாக அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர் காலத்தில் கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி புதிய அத்தியாயம் ஆரம்பிக்கும் என்ற நம்பிக்கையையும் தெரிவித்து நான் ஏற்கனவே எழுத்து மூலம் வாழ்த்துக்கள் தெரிவித்து விட்டேன். இந்த சபையும் அந்த வாழ்த்தோடு இணைத்து புதிய ஆளுனருக்கு நமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வோம். ஆளுனர்தான் இந்த மாகாணத்தின் அதிகாரம் கொண்டவர். சபை இல்லாத இடத்தில் கௌரவ ஆளுனர்தான் நமது அமைச்சர். நமது சகல நடவடிக்கைகளுக்கும் அங்கீகாரம் தருபவரும் அவரேதான். அவருக்கு நாம் ஒத்துழைப்புக்களை வழங்கி நமது மக்களுக்கான சேவைகளை ஆற்ற வேண்டியது நமது கடமை.

சென்ற கூட்டத்தில் நாம் SLIATE பற்றி பேசியிருந்தோம். அதன் மூலம் நமக்கு வருமதியாக இருந்த 540,000 ரூபா பெறப்பட்டு விட்டது. அத்தோடு அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மார்ச் மாதம் நீடிப்பதற்கு சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதனை நான் அவர்களுக்கு தெரியப்படுத்தியிருக்கின்றேன்.

CTB Work Shop தொடர்பாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்களையும் அழைத்து நமது சபையின் பிரேரனையின்படி பாம் வட்டையில் காணி ஒதுக்குவதற்காகவும் அதற்கு அவர்களுக்கு உதவுவதாகவும் ஒரு உறுதிமொழி வழங்கியுள்ளார் என்ற நல்ல செய்தியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அவ்வாறு நடந்தால் அவ்விடம் வெற்றிடமாகும் அது மடுமல்ல அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் நமது நீதிமன்றத்திற்குப் பின்னால் இருக்கும் வளவை நீதி மன்றத்திற்கு வழங்குவதற்கான சபையின் சிபார்சு பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த சந்தர்ப்பத்தில் சம்மாந்துறை நீதிமன்றத்திற்கு பின்னால் உள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான காணியை நீதி மன்றத்திற்கே கையேற்ப்புச் செய்வதற்கான ஒரு முன் மசோதாவை சபையினுடைய தீர்மானமாக நாங்கள் எடுத்து அதனை முன்மொழிந்தால் சிறப்பாக இருக்கும் என்பது எனது முன்மொழிவு.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
CTB க்குரிய காணிதான் நீதிமன்றத்திற்குப் பின்னால் உள்ளது. சபையின் பராமரிப்பில் உள்ள காணி அதற்கு பக்கத்தில் உள்ளது. நாம் CTBக்கு ஒதுக்கப்பட்ட காணியை நீதி மன்றத்திற்கு வழங்க சிபார்சு செய்யவே நாம் முடிவெடுத்தோம். CTBக்கு ஒதுக்கப்பட்ட காணி பிரதேச சபைக்குச் சொந்தமில்லை. நமது நிலத்திற்கும் அதற்கும் தொடர்பு இல்லை.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, CTBக்கு வேறு இடத்தில் காணி ஒதுக்கப்படுகின்ற போது அந்தக் காணி நீதி மன்றத்திற்குரிய எதிர்கால அபிவிருத்திக்காகவேண்டி நமது கௌரவ சபையில் இருக்கின்ற மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் அந்தக் காணியை நீதி மன்ற கட்டடத் தொகுதிக்கு உள்வாங்குகின்ற ஒரு முன்னெடுப்பை நமது சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது என்று நிறைவேற்றினால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

**தீர்மானம் 02**

சம்மாந்துறை நீதவான் நீதி மன்றத்திற்கு அருகில் அமைந்திருக்கின்ற CTB இற்கு ஒதுக்கப்பட்ட காணியை மாற்றுக்காணி பாம் வட்டையில் கேட்கும் போது, சம்மாந்துறை நீதவான் நீதி மன்றத்திற்குரிய கட்டட வேலைகளை மேற்கொள்வதற்கு நீதி மன்றத்திற்கே பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஸ்.எம்.எம். முஸ்தபா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

பசார் வீதியில் பாவனையில் இல்லாமல் இருக்கும் கட்டடங்களுக்கு நாம் அறிவித்தல் கொடுத்திருக்கின்றோம். அந்தக் கட்டடங்களுக்கு சொந்தக்காரர்களில் ஓர் இருவர் தாங்களாகவே அதனை அகற்றுவதற்கான சம்மதம் தெரிவித்திருக்கின்றார்கள். மற்வர்களின் கட்டடங்களை பரிசோதனை செய்து அறிக்கை ஒன்று தருவதற்கு நாம் சபையூடாக கட்டடத் திணைக்கள பொறியியலாளருக்கு எழுத்து மூலம் கடிதம் அனுப்பியுள்ளோம். அவைகளுக்கான அறிக்கை வரும் பட்சத்தில் சட்டத்தில் இருக்கும் அதிகாரங்களைக் கொண்டு அந்தக் கட்டடங்கள் அகற்றப்படும். அதற்குரிய அதிகாரம் நமது சபைக்கு இருக்கின்றது. அது தேவைப்படாது என்று நினைக்கின்றேன். ஆனால் அவ்வாறு செய்ய வேண்டிய அவசியம் வந்தால் அதனை செய்வதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் நடாத்தப்பட்ட அமர்வுக்கு சென்று கைநூலைப் பெறாத உறுப்பினர்கள் இருப்பார்களேயானால் அவர்கள் இந்த சபை முடிந்து செல்லும் போது தயவு செய்து அதனை எடுத்துச் செல்லுங்கள்.

2018 ஆம் ஆண்டு விரும்பியவாறு வீதிகளைக் கொண்டு வந்து செய்தோம். அதில் வந்த பிரச்சினைகள், அதனால் ஏற்பட்ட விளைவுகள் பற்றி அனைவருக்கும் தெரிந்த விடயமே. இவைகளை நாம் சபையாக பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. காரணம் யார் வீதியைப் போட்டாலும் மக்கள் நம்மிடம்தான் கேட்பார்கள். எனவே நமக்குள் ஒரு கட்டுப்பாடு வந்து ஒரு திட்டம் இருக்க வேண்டும். எம் அனைவரின் விருப்பமும் நமது ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்துவதே. அது அரசியல் வாதிக்கு இருக்கின்ற என்னம்தான். ஆனால் நாம் அதனை செய்வதனால் மற்றவர்களுக்கு பாதிப்பு வராமல் இருக்க வேண்டும்.

பொதுவாக மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளக்கூடியவாறு இந்த வேலைகளைச் செய்ய வேண்டும். சென்ற வருடம் 200 க்கும் மேற்பட்ட மதிப்பீட்டறிக்கைகளைத் தயாரித்தோம். அவைகளில் சில செயற்படுத்தப்பட்டது. பல செயற்படுத்தவில்லை. ஆனால் அதிலும் நமது திட்டம் இருக்கவில்லை. நம்மிடம் வந்த முறைப்பாடுகளின் படி அதனை செய்து கொண்டு போனோம். இதற்குப்பிறகு நாம் அதற்கு அப்பால் சென்று செயற்பட வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் அனைவரும் பேசுவது போல் ஒரு தேர்தல் வருடமாக வரலாம். சில வேளை கொடுப்பனவுகள், செலவுகள் அதிகரிக்கலாம். எனவே, அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நாம் ஒரு திட்டத்துடன் செயற்பட வேண்டும்.

சம்மாந்துறை பிரதேசத்தில் உள்ள கல்லரிச்சல் ஏரியாவில் அன்வர் இஸ்மாயில் மாவத்தையில் தெற்கே உள்ள பகுதி ஒரு மோசமான பகுதி. அதே போல் வண்டு வாய்காலுக்கும் வடக்கே, தெற்கே உள்ள பகுதிகளிலும், சென்னல் கிராமம் 01,02 இவைகளில் பாரிய பிரச்சினை வடிகான் இல்லாமல் பாதைகள் செய்வதனால் பிரயோசனம் அடைய முடியாமல் உள்ளது. அந்தப் பகுதிகளில் பைனன்டகட்டை மையமாக வைத்து அதிலிருந்து மேலால் செய்வதனால் கீழால் வருகின்ற பாதிப்பைத் தடுக்கலாம். ஆனால் நாம் மக்கள் குடியிருக்கும் பகுதியை செய்கின்றோம். கீழ் உள்ள வீதியால் செல்ல முடியாத நிலை காணப்படும். இதனால் முதலில் வடிகான்களுக்கு மதிப்பீட்டறிக்கை தயாரித்து அதனை ஒழுங்கு படுத்த வேண்டும்.

இந்த வருடத்தில் நமது 02 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு 05 வருடம் பூர்தியானதும் அவர்களுக்கு இடமாற்றம் வந்திருக்கின்றது. புதிய உத்தியோகத்தர்கள் வருவார்கள் சில வேளை அது தாமதிக்கலாம். ஆனால் எது எப்படி இருந்தாலும் முதல் மாதத்திற்குள் நமது திட்டங்களை வகுத்து, அந்தந்த பிரதிநிதிகளுக்கு கொடுத்து அதனை செயற்படுத்துவதில் தான் நமது வெற்றி இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த விடயத்தில் நான் குறிப்பிட வேண்டும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை எங்களது உறுப்பினரூடாக செய்வது மிகவும் சிறந்ததாக இருக்கும் என்று நினைக்கின்றேன். அந்தந்த வட்டாரத்தில் இருக்கின்ற உறுப்பினர்களின் அனுமதி இல்லாமல் மற்றவர்கள் வந்து இடைமறித்துச் செய்வதனால் எங்களுக்கு எந்தவிதமான பிரயோசனமும் இல்லாமல் இருக்கின்றது. நாங்கள் கட்சிக்காகவோ அல்லது மக்களுக்காகவோ வேலை செய்தாலும் நாங்கள் உறுப்பினர் என்ற மதிப்புரிமை அவ்விடத்தில் இழக்கப்படுகின்றது. உறுப்பினர்களது அனுமதி இல்லாமல் எங்களது வட்டாரத்தில் எது செய்தாலும் அந்த வட்டாரத்தின் உறுப்பினரையும் உள்வாங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதனைக் கூறியதற்குக் காரணம் இதில் அதிகார போட்டி இல்லை. சபையில் பட்டியல் மூலம் வந்த அங்கத்தவர்கள் இருக்கின்றார்கள். வட்டாரத்தின் மூலம் வந்த அங்கத்தவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் சட்டத்தில் இரண்டிற்கும் ஒரு வேறுபாடும் இல்லை. நமக்குள் பரஸ்பர ஒத்தழைப்பு இருக்க வேண்டும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட அல்லது பட்டியலினால் வந்த வேட்பாளர் ஒரு வட்டாரத்தில் வாழ்வாரானால் அவரையும் உள்வாங்கி அவருடனும் கருத்துக்களைப் பரிமாறி அந்தத் திட்டங்களைத் தெரிவு செய்வதில்தான் திறமையான வெற்றி உள்ளது. அவ்வாறு செய்தால் உங்களுக்கு வேறு எதிர்ப்பு வந்தாலும் அதற்குத் துனையாக இன்னும் ஒருவர் இருப்பார். நமக்குள் மாற்றுக் கருத்துக்கள் வந்தால் அது ஆரம்பத்திலேயே பிழையாகிவிடும்.

நமது ஊரின் சரித்திரத்தில், நாம் படித்த பாடம் நாம் எவ்வளவு அபிவிருத்தி வேலைகளைச் செய்தாலும் அவை எந்தளவு பிரதி பலிக்கும் என்பது சந்தர்ப்பத்தைப் பொறுத்து உள்ளது. நாம் செய்கின்ற அபிவிருத்தி வேலை நமக்கு பெயர் வர வேண்டும் என்றில்லாமல் அதனை நன்றாக செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் செய்கின்ற போது சின்னச் சின்ன பிரச்சினைகள் வரலாம். ஆனால் இதுதான் ஆரம்பம் அதில் ஏற்படுகின்ற இன்னல்களை நாம் பெரிது படுத்தக் கூடாது. ஆனால் நமக்குள் ஒற்றுமை இருக்க வேண்டும். இதில் நீ பெரிதா? அல்லது நான் பெரிதா? என்றில்லாமல் செயற்பட வேண்டும்.

உங்களுக்கு விமர்சனங்கள், கருத்து முரன்பாடுகள் இருந்தால் இந்த சபைக்குக் கொண்டு வந்து பேசி அதற்கான நல்ல முறையிலான முடிவுகளைப் பெற்றுக் கொள்ளலாம். சென்ற கூட்டத்தில் கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கூறியது போன்று வெவ்வேறு கருத்துக்களுடன் நாம் வந்தாலும், காரசாரமாகப் பேசினாலும் இறுதியில் ஒரு சிறந்த முடிவொன்றைப் பெற்றே வெளியில் செல்ல வேண்டும். வெளியில் சென்று இது இவரது வேலை, அவரது வேலை என்று கூறாமல் இது சபையில் கருத்துக்களைப் பரிமாறி இந்தத் தீர்மானங்களை எடுத்தோம் என்ற ஒற்றுமையில் இருப்போமானால் நிச்சயமாக நாம் இந்த நடவடிக்கைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம். அதில் தயவு செய்து சென்னல் கிராமம் 02 பௌசி மாவத்தை தெற்கே உள்ள பாதைகள் கல்லரிச்சல் பகுதிகளிலும் பாதைகள் உள்ளது. அவைகளில் வடிகான் இல்லாமல் பாதைகளை அமைப்பதனால் பாரிய சவால் உள்ளது. முதலில் வடிகான்களை ஒழுங்கு படுத்தி பாதைகளைத் தீர்மானித்து செய்வோமானால் சிறப்பாக இருக்கும். திட்டங்களுக்குள் இதனையும் உள்வாங்க வேண்டும்.

சென்ற சபை அமர்வில் கூறியது போன்று மஹல்லா மஹல்லா மையவாடியில் மர்ஹூம் MA.அப்துல் மஜீட் இன் பெயரில் கௌரவ அமைச்சர் றிசாட் பதியுதீன் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் ஜனாசா மண்டபம் கட்டப்படுகின்றது. அதனை அன்மித்த பகுதியில் ஒரு பூங்கா

அதாவது மாலை நேரங்களில் மக்கள் குடும்பம சகிதம் சென்று அவ்விடத்தில் பொழுது போக்குளைக் கழிப்பதற்கு நமது சபையினால் ஒரு தீர்மானத்தை எடுத்து கௌரவ நகர திட்டமிடல் அமைச்சரிடம் சமர்ப்பிக்க வேண்டும். ஏனென்றால் அதற்கான வளங்ககள் அந்த அமைச்சிடம்தான் உள்ளது. அதே நேரம் கௌரவ அமைச்சர் றிசாட் பதியூதீன் அவர்களிடமும் கேட்கலாம். யாரிடமாவது அதற்கான நிதியைப் பெற்று இந்த வருடத்திற்குள் அந்தப்பகுதியை ஒரு பூங்காவாக மாற்ற வேண்டும்.

ஏனென்றால் அங்கிருந்து வருகின்ற முறைப்பாடுகள் பற்றி பல உறுப்பினர்களுக்குத் தெரியும். நாம் அனைவரும் இந்த அமர்வின் பின் அங்குள்ள மலைக்குச் சென்று பார்ததால் எத்தனை வகையான மதுபான போத்தல்கள் உள்ளது என்பதனைக் காணலாம். ஒவ்வொரு பத்தைக்குள்ளும் போத்தல்கள் மலைபோல் குவிந்து காணப்படுகின்றது. அதனை இல்லாமல் செய்ய வேண்டுமானால் மக்கள் நடமாட்டம், மின் விளக்கு வெளிச்சம் போன்றவைகள் இருக்க வேண்டும். அதனை தீர்மானமக எடுத்து ஒரு திட்டத்தை தயாரித்து செயற்படுத்த வேண்டும்.

**தீர்மானம் 03**

மஹல்லா மஹல்லா மையவாடியிலும் அன்மையில் உள்ள பகுதியிலும் பூங்கா ஒன்றை உருவாக்குவதற்கும், நடைபாதையினை அமைப்பதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

மின்சார சபைக்கும் எமக்கும் இடையில் ஆரம்பத்திலேயே தெரு விளக்குகள் தொடர்பாக ஒரு சர்ச்சை உருவாகியுள்ளது. அதாவது நாம் தெரு விளக்குகளை கட்டுப்படுத்தாவிட்டால் அதனை அவர்கள் கட்டுப்படுத்துவார்களாம் என்று கூறுகின்றார்கள். இது நமக்கு பாரிய சவாலாக உள்ளது. நான் ஆரம்பத்தில் இருந்து சொல்லி வருவதும் இதுதான் அனைத்து மக்களும் உறுப்பினர்களிடம் வந்து லைட் போட்டுத் தருமாறு கோருவார்கள்.

அதனை செய்வதால் பிரச்சினை இல்லை. ஆனால் அதனைப் போடும் முறையில் ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும். நாம் சோடியம் லைட்களின் வோல்டேஜ் கூடுதலாக இருப்பதனால் அதனைக் குறைப்பதற்காக LED லைட் பொருத்தி வருகின்றோம். ஒவ்வொரு LED லைட்டும் 10,000 ரூபா பெறுமதி வாய்ந்தது.

இவைகள் யாவற்றையும் மின்சார சபை கவனத்தில் கொண்டு அவர்களின் திட்டத்தின் படி சம்மாந்துறையின் முழுப்பாவனையில் 02 வீதம் தான் சபை தெரு விளக்குகளுக்காக உபயோகிக்க முடியும். ஆனால் நாம் கிட்டத்தட்ட 3½, 04 வீதத்திற்கு மேல் உபயோகிக்கின்றோம். இதற்குக் காரணம் நமது ஊர் பரந்து விருந்தது. சில பாதைகளில் பாவனை குறைவாக இருந்தாலும் அதற்கு ஈடாக தெரு லாம்பு உள்ளது. நமது ஊர் விவசாய கிராமமாகையால் வட்டை ஓரத்திலும் தெருலாம்பு பொருத்தியுள்ளோம். கௌரவ உறுப்பினர்கள் இதனைப் பாரமெடுத்து எவ்வாறு சரி செய்யலாம் என்பது பற்றி எனக்குக் கூறுங்கள். ஏனென்றால் இது கஸ்டமான விடயம். சில பாதைகளில் ஒவ்வொரு தூனிலும் ஒரு மின்விளக்கு போடப்பட்டுள்ளது. அதே நேரம் சில பகுதிகளில் மின்விளக்கு இல்லை. அவைகளை தற்போது நிவர்த்தி செய்து வருகின்றோம். ஆனால் அது பொருத்தமில்லாத வேலை. ஒரு தூன் விடடு ஒரு தூன் என்று சொன்னால் ஏதாவது ஒரு நியாயமாகும்.

இதனை மின்சார சபை செய்தால் நாம் அதிலிருந்து தப்புவதற்கு இலகுவாக இருக்கும். ஆனால் அது சரியாக இருக்காது. நமது பொறுப்பை நம்மால் செய்ய முடியாவிட்டால் அது ஒழுங்கில்லை. அந்த சந்தர்ப்பங்கள் வரும்போது உங்களது ஆக்க பூர்வமான கருத்துக்களைக் கூறலாம்.

மிகவும் முக்கியமான விடயம் இன்று ஆளுனர் ஸ்ரீ லங்கா சுததந்திரக் கட்சியின் முக்கியஸ்தர். கிழக்கு மாகாணத்தின் சகல அதிகாரங்களும் அவரின் கீழ் வருகின்றது. கௌரவ அல் ஹாஜ்

றவுப் ஹக்கீம் அவர்களின் நகர திட்டமிடல் உயர் கல்வி அமைச்சு இருக்கின்றது. அதே போல் கௌரவ அல் ஹாஜ் றிசாட் பதியூதீன் அவர்களின் வர்த்தக கைத்தொழில் மற்றும் நீண்ட காலம் இடம் பெயர்ந்தவர்கள் போன்ற அமைச்சுக்களில் நமது சபையின் பிரதி நிதிகளைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல இந்த நாட்டின் பிரதமரின் பிரதிநிதியும் நமது சபையில் ஒரு அங்கத்தவர் இருக்கின்றார். அனைவரையும் இணைத்து நாம் எவ்வாறு இந்த சபையின் மூலம் நமது ஊரை அபிவிருத்தி செய்யலாம் என்ற ஆக்க பூர்வமான திட்டங்களில் ஒவ்வொருவரும் பங்கெடுத்து செயற்பட வேண்டும். ஒருவர் செய்வதை மற்றொருவர் செய்யக்கூடாது.

இன்று பாதைகள் உட்கட்டமைப்பு செய்வதற்கு நகர திட்டமிடல் அமைச்சை விட வளங்கள் உள்ள அமைச்சு நமக்கு இல்லை. வாழ்வாதாரப் பகுதியில் வர்த்தக அமைச்சு இருக்கின்றது. அதே நேரம் அனைத்துக்கும் மேலாக பிரதமரின் அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சினூடாக நமக்கு செய்ய வேண்டிய விடயங்கள் பல இருக்கின்றன. நேரகாலத்தோடு அந்தத் திட்டங்களை உருவாக்கி முடியுமானால் இந்த மாதத்திற்குள் ஆலோசனைகளைக் கொண்டு வந்து அவசரமாக அவைகளை முன்மொழிவாக எழுதி அனுப்புவதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை பிரதேச சபையில் தாங்கள் கௌரவ தவிசாளராக இருப்பதையிட்டு நான் மகிழ்சியடைகின்றேன். என்னைப் போன்றுதான் சக உறுப்பினர்களுக்கும் இருக்கும் என்று நான் கருதுகின்றேன். பிரதேச சபையின் ஒவ்வொரு கூட்டத்தொடருக்கும் வருகின்ற போது இதனை ஒரு பயிற்சிப் பட்டறை போன்று உணர முடிகின்றது. அதன் அடிப்படையில் மிகவும் முக்கியமான ஏனைய பிரதேச சபையை விடவும் சம்மாந்துறை பிரதேச சபை மிகவும் ஆக்கபூர்வமான தூரதிஸ்டியான சிந்தனை கொண்ட ஒரு பல்கலைக்கழகமாக இயங்குகின்றது என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

கடந்த நவம்பர் 21 ஆம் திகதி எனக்கு கிடைத்த வாய்பின் அடிப்படையில் பிரதேச சபையில் நிறைந்த ஏற்பாடுகளைச் செய்யலாம் என்ற உணர்வுடன் ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றேன். ஆனால் கடந்த காலங்களில் எனக்குக் கிடைத்த பாதைக்கான வேலைகளை ஏதோ ஒரு வகையில் கொண்டு வந்து செய்தேன். அதில் பல குறைபாடுகள் இந்த சபையில் பேசப்பட்டது. என்னைப் பொறுத்தமட்டில் இவ்வாறான தவறுகள், பிழைகள் ஆரம்ப காலத்தில் இருக்கத்தான் செய்யும். ஏனென்றால் எனக்கு முதல் சபை வருகை. எனவே இனிவரும் காலங்களில் கடந்த கால பாதை பிழைகளைப் போல் எந்தப் பிழைகளும் நடக்காமல் கவனமாக மேற்கொள்வேன். அன்று நூர் பள்ளி வீதி என்றழைக்கப்படுகின்ற வீதியை இங்கிருக்கின்ற உத்தியோகத்தர்கள் ஊடாகத்தான் தெரிந்து கொண்டேன். ஆனால் நான் தபால் அதிபராக கடமையாற்றும் போது அந்த வீதி வாத்தியார் வீதியாகத்தான் இருந்தது. இன்று கௌரவ உறுப்பினரூடாக அந்தப் பெயரை மாற்றி விட்டேன். கௌரவ தவிசாளர் அவர்களின் படத்தை அழகாக பதித்துள்ளேன்.

மிகவும் தெளிவாகவும், அழகாகவும் மக்களின் பிரதிநிதிகளும், பட்டியலில் இருந்து வந்த பிரதிநிதிகளும் இருவரும் ஒருவர்தான் என்று கூறினீர்கள். அதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இனி வரும் காலங்களில் இந்த சபைக்கும் ஊருக்கும் என்னால் செய்யக்கூடிய விடயங்களை நான் திட்டமிட்டிருக்கின்றேன். அந்த நேரத்தில் எந்தெந்தப் பகுதிகளில் எவ்வாறு செய்ய வேண்டும் என்று கௌரவ தவிசாளர் அவர்களின் ஆலோசனையைப் பெற்றுக் கொண்டுதான் நான் அவ்விடயங்களைச் செய்வேன். நான் எந்தப்பகுதியில் வேலைகளை மேற்கொண்டாலும் அந்தப் பகுதியில் உள்ள உறுப்பினர்களையும் கௌரவப் படுத்துவேன் என்று கூறுவதோடு,

மஹல்லா மஹல்லா மையவாடி பூங்கா தொடர்பாக எனக்கொரு வாய்பு உள்ளது. அதற்குரிய மதிப்பீட்டறிக்கை கிடைத்தால் நிச்சயமாக அதற்கான முயற்சி எடுப்பேன். தற்போது நான் பள்ளிவாசல் ரீதியாக முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றேன். அந்த நேரத்தில் இதனையும் சேத்துக் கொள்ளலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது ஊரின் அபிவிருத்தி சமபந்தமாக நாங்கள் சபையினுடைய ஆரம்பக் கூட்டத்தில் கூட யாருடைய அபிவிருத்தியிலும் யாருக்கும் குந்தகம் விளைவிக்கக்கூடாது என்ற ஒரு தீர்க தரிசனமான முடிவெடுத்திருந்தோம். அதன் அடிப்படையில் நான் சில விடயங்களைக் கூறலாம் என்று நினைக்கின்றேன். இன்றே எனது மல்கம்பிட்டி வட்டாரத்திலே சென்னல் கிராமம் 02ம் பிரிவில் கௌரவ பிரதம மந்திரி அவர்களுடைய என்னக்கருவிலே உருவாகிய கம்பெரலிய வேலைத்திட்டத்தின் கீழ் 04 வேலைத்திட்டங்கள் செய்யப்பட்டது. அதில் ஒன்று எங்களுடைய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் MI.மன்சூர் அவர்களின் முயற்சியினாலும், மற்றயது உள்ளுராட்சி மற்றும் மாகாண சபைகளுடைய இராஜாங்க அமைச்சர் கௌரவ HMM.ஹரீஸ் அவர்களது நிதி ஒதுக்கீட்டிலும் 02 வேலைகள் செய்யப்பட்டது. இன்னும் இரண்டு வேலைகள் எங்களது ஊரின் மற்றுமொரு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் SMM.இஸ்மாயில் அவர்களது நிதி ஒதுக்கீட்டிலே செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

நான் யாருடைய அபிவிருத்தியையும் தாழ்த்திப் பேசவில்லை. அதில் ஒன்று எமது பிரதேச சபையின் பராமரிப்பின் கீழ் உள்ள சென்னல்கிராமத்தில் இருக்கின்ற பொதுச் சந்தை வளாகத்திற்கான சுற்றுமதில் இடுகின்ற வேலைத்திட்டம். அந்தப் பிரதேசத்திற்கோ, அந்த இடத்திற்கோ எந்த வகையிலும் பொருத்தமற்ற வகையிலே சுற்றுமதில் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படுகின்ற போது நானும் அந்தப் பிரதேசத்திற்கான அபிவிருத்தி உத்தியோகத்தரும், எமது சபையில் இருக்கின்ற 02 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் பிரதேச செயலகத்தில் உள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தரையும் அழைத்து அந்த இடத்திற்குச் சென்று இதனை அவ்வாறு செய்யாதீர்கள் என்று அனுபவம் வாய்ந்த தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் மூலம் அவர்களுக்கு சொல்லப்பட்ட கருத்துக்களை புறம் தள்ளிவிட்டு நாங்கள் விரும்பியவாறே செய்வோம் என்று அந்த வேலையைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். எனவே, அந்த இடத்திற்கு நான் தனியாக சென்று இந்த வேலையை இவ்வாறு செய்ய வோண்டாம் என்ற கருத்தைக் கூறினால் நாங்கள் செய்கின்ற அபிவிருத்தி வேலைகளை இவர் தடுக்கின்றார் என்று மறுபக்கம் அந்தப் பளி என்மீதே மாறிவிடும்.

அதே போன்றுதான் 40 வீட்டுத் திட்டத்திலும், அப்ரார் பள்ளி வீதி ஏற்கனவே நீங்கள் சபையில் தவிசாளராக இருக்கின்றபோது ஒரு குறிப்பிட்ட துரம் அந்த வீதி கொங்றீட் பாதையாக மாற்றப்பட்டது. அதன் பிற்பாடு கௌரவ நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் முன்னய நாள் மாகாண சபை உறுப்பினர் கௌரவ ILM.மாஹிர் அவர்களின் முயற்சியினால் ஒரு பகுதி கொங்றீட் இடப்பட்டிருந்தது. ஏனைய பகுதியும் இருந்தது. இன்று கம்ரெலிய வேலைத்திட்டத்தின் கீழ் மீகுதி பகுதியாக இருந்த பாதை செப்பனிடப்பட்டு கொங்றீட் வீதியாக மாற்றப்படுகின்றது.

உண்மையில் அதனைப் பார்கின்ற போது எனது வட்டாரம் என்றில்லாமல் ஊரில் இருக்கின்ற தேவை என்று நமது சபையில் இருக்கின்ற கௌரவ உறுப்பினர்கள் அனைவரதும் தேவை என்று நான் நினைக்கின்றேன். ஏனென்றால் அப்பிரதேசத்தில் அபிவிருத்தி அடைந்து வருகின்ற ஒரு பிரதேசமாகும். எனவே எங்கள் அனைவருக்கும் அதன் பொறுப்பு இருக்க வேண்டும். அந்த இடத்திற்கு வீதி விஸ்தரிக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்படுகின்றது. நான் நேரில் சென்று பார்த போது என்னுடைய அனுபவத்தில் அந்தப் பாதை ஏதோ ஒரு தனியான ஒருவருடைய தேவைக்காக அமைக்கப்படுகின்ற ஒரு சந்தர்ப்பமாகத்தான் இருக்கின்றது. பாதையின் தொடக்கத்திலும், முடிவடையும் பகுதியிலும் மீதம் இருக்கின்றது. நடுவில் ஒரு குறிப்பிட்ட தூரம் அந்தப் பாதை கொங்றீட் இடப்பட்டிருக்கின்றது.

அந்த இடத்திற்கு எங்களது தொழில்நுட்ப உத்தியோகத்தரை அழைத்துச் சென்று இது இவ்வாறு செய்யக்கூடாது நல்ல முறையில் செய்யுங்கள் என்று எங்களது கருத்துக்களைக் கூறியும் அவர்கள் அதனை புறம்தள்ளிவிட்டார்கள். எனவே, எங்களுடைய பராமரிப்பிலே இருக்கின்ற விடயம் யார் ஊரில் அபிவிருத்தி வேலைகளைச் செய்தாலும் அவைகள் மிகவும் திட்டமிட்டவகையிலே சரியான முறையில் செய்யப்பட வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும்.

ஊரின் அபிவிருத்தி சம்மந்தமாக பேசப்படுகின்ற போது மிகவும் பாரம்பரிய சவாலாக நாங்கள் மேற்கொள்கின்ற விடயம்தான் தெருலாம்பு பொருத்துவதும் திண்மக்கழிவு அகற்றுவதும். இந்த இரண்டிலும் மிகவும் ஒரு பாரதூரமான கஸ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற வட்டாரத்திலேயே நான் உறுப்பினராக இருக்கின்றேன். ஏனென்றால் சம்மாந்துறை பிரதேச சபையின் எல்லையைப் பொறுத்தவரையில் மல்கம்பிட்டி புளக் ஜே மேற்கு 02, சென்னல் கிராமம் 01, 02 என்கின்ற அந்தப் பிரதேசங்களை விட தெருலாம்பு பொருத்துவதற்கு முக்கியத்துவம் வழங்கக்கூடிய பிரதேசம் வேறில்லை. எமது ஊரிலே என்னைப் பொறுத்தவரையில் அதற்கு முன்னுரிமை வழங்கித்தான் மற்றய பிரதேசங்களுக்கு வழங்க வேண்டும் என்பதை சபையில் இருக்கின்ற கௌரவ உறுப்பினர்களிடமும், தவிசாளர் அவர்களிடமும் பணிவாக கேட்டுக் கொள்கின்றேன்.

திண்மக்கழிவு அகற்றுகின்ற விடயம் இன்று புளக் ஜே 01,02 ம் பிரிவுகளில் இருக்கின்ற மக்கள் என்னிடம் மிக வினயமாக கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். திண்மக்கழிவு அகற்றுகின்ற சேவையை எங்களது பிரதேசத்திற்கு விஸ்தரிக்க வேண்டும் அதற்கான வரி அறவீட்டு பணத்தினை நாங்கள் செலுத்துவதற்கு தயாராக இருக்கின்றோம் என்கின்றார்கள். காரணம் ஊரினுடைய மத்தியில் இருக்கின்ற கழிவுகளை இரவு நேரங்களில் கொண்டு வந்து எங்களது வட்டாரத்தில் மிகவும் பெறுமதி வாய்ந்த மதிக்கத்தக்க இடங்களான பள்ளிவாசல், பாடசாலை, மையவாடி இருக்கின்றது. அதனைப் பார்த்துக் கொண்டு அதற்கு முன்னால் குப்பைகளைக் கொட்டி விட்டு செல்கின்றனர்.

நேற்று முன்தினம் முதல் நாள் பாடசாலை சென்ற மாணவனை அந்தக் கழிவுகளை உண்ண வந்த கட்டாக்காலி நாய் துரத்தி மாணவனின் சீருடையை கிழித்துள்ளது. அந்த மாணவனைக் கூட்டிக் கொண்டு அவரின் பெற்றோர் எனது வீட்டுக்கு வந்தார். நாங்கள் உங்களை சபைக்கு அனுப்பியது பாடசாலை செல்கின்ற மாணவர்களை நாய் கடிப்பதற்காகவா? என்று ஒரு கேள்வியை என்னிடம் கேட்டார். அவருக்கு மிகவும் தெளிவாகக் கூறினேன். எங்களுடைய ஒவ்வொரு கூட்டத்தினையுடைய கூட்டறிக்கையும் என்னிடம் உள்ளது. அதனை உங்களால் வாசிக்க முடியுமானால் வாசித்து தெளிவைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினேன். சகல அமர்வுகளிலுமே திண்மக்கழிவு சம்பந்தமாக நான் பேசிக் கொண்டிருக்கின்றேன். கௌரவ தவிசாளர் அவர்களே முதல் கட்டமாக மத்தியிலே இருந்து அந்த இடத்திற்கு கொண்டு வந்து கொட்டப்படுகின்ற கழிவுகளையாவது எங்களுடைய சபையினூடாக ஒவ்வொரு நாளும் செய்கின்ற சேவையினூடாக அந்தக்கழிவுகளை நாங்கள் துப்பரவு செய்ய வேண்டிய தேவை எனக்கு ஏற்படுத்தித் தருமாறும்,

மேலும் எமது ஊரின் அபிவிருத்தி சம்பந்தமாக நாங்கள் பார்க்கின்ற போது இன்று எமது ஊரினுடைய அரைவாசி நிலப்பரப்பினையும் குறைந்த ஒரு பிரதேசமாக அக்கரைப்பற்று பிரதேசம் ஒரு மாநகர சபையாகவும் பிரதேச சபையாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அதே போன்று இன்று கல்முனை மாநகர சபை எல்லையை 04 பிரதேச சபையாக பிரிப்பதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கின்றது. எமது ஊரை குறைந்தது நான்கு சபையாக பிரிக்கவேண்டிய ஊரை முதற்கட்டமாக நகர சபையாகவும், பிரதேச சபையாகவும் பிரிக்க வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது. அவ்வாறு பிரிப்பதற்காக ஏற்கனவே எடுக்கப்பட்ட ஒரு முடிவும் இருக்கின்றது. ஆனால் அவ்வாறு பிரிக்கப்படுகின்ற போது எந்தவிதமான பாதகமும் இல்லாமல் செயற்பட வேண்டும் என்பதுமே எனது வாதமாகும்.

மர்ஹூம் BA.மஜீட் அவர்கள், மர்ஹூம் அன்வர் இஸ்மாயில் போன்ற அரசியல் தலைமைத்துவங்களுக்கு இவ்வளவு அபிவிருத்தி வேலைகளைச் செய்ய முடியுமாக இருந்தால் ஏன் இப்போது இருக்கின்ற எங்களது அரசியல் தலைமத்துவங்களால் இந்த ஊருக்கான அபிவிருத்திப் பாதையை முன்னோக்கக் கூடிய திட்டங்களை வகுக்க முடியாது? எனக்கு நன்றாக நினைவிருக்கின்றது. எமது ஊரினை 02 பிரதேச சபையாகவும், 02 பிரதேச செயலகமாகவும் மாற்றுவதற்கு மர்ஹூம் அன்வர் இஸ்மாயில் அவர்கள் ஓர் எல்லை நிர்னயம் செய்திருந்தார். அந்த

எல்லை நிர்னயம் செய்யும் போது நான் சிறியவனாக இருந்தாலும் சென்னல் கிராமத்திலே அதற்கான அபிவிருத்தி என்பதனால் என்னையும் அழைத்து சில வேலைகளையும் செய்திருந்தார்.

எங்களது பிரதேச சபையின் சந்தை வளாகமாக ஒதுக்கப்பட்டிருக்கின்ற அந்த இடத்தில்தான் பிரதேச செயலகத்திற்குரிய கட்டடம் அமைய வேண்டும் என்று எண்ணக்கருவில் இருந்தது. ஆகவே, எமது ஊரில் அபிவிருத்தி வேலைகளைச் செய்வதாக இருந்தால் நாங்கள் இந்த சபையில் இருக்கின்ற கௌரவ உறுப்பினர்களிடமும் வினயமாகக் கேட்டுக் கொள்வது குறைந்தது எமது ஊரில் பிரதேச சபையும், நகர சபையுமாவது மாற வேண்டும் அதே போன்று 02 பிரதேச செயலகமும் எமது ஊரில் வர வேண்டும். எவ்வாறு இருந்தலும் இந்த ஊருக்கு நல்லது நடக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்னல் கிராமத்தைப்பற்றி கௌரவ உறுப்பினர் கூறிய விடயம் முற்றுமுழுதான உண்மை அதனை ஏற்கனவே நானும் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். சென்னல் கிராமம் 01, 02 உம் சம்மாந்துறை ஊருக்கு சமமானது. கௌரவ உறுப்பினர் அவர்கள் கூறிய விடயத்தில் மாற்றுக் கருத்தில்லை. கம்பரலிய வேலைத்திட்டங்கள் எங்களுக்கு வருகின்ற போது சற்றுப் பொறுமையாக இருந்து அபிவிருத்திகளை இங்கு செய்யாமல் முழுமையான வளத்தையும் கொண்டு அந்தப்பிரதேசத்தை முன்னேற்றி விட்டு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின் வளத்தை மாற்றி எடுத்தால் அந்தப் பிரதேசத்தில் இருக்கின்ற வருமானத்தைக் கொண்டு பிரதேச சபையை முன்னேற்றலாம். உண்மையில் நானும் அந்தப் பிரதேசத்தில்தான் இருக்கின்றேன். அந்தச் சுற்றுமதில் ஒவ்வொரு கடையறைக்கும் சொந்தமான இடங்கள் ஆனால் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மின்சாரம் தொடர்பாக கூறியிருந்தீர்கள் அவர்களுக்கும் ஒரு நியாயம் இருக்க வேண்டும். என்னவென்றால் இந்தப் பிரதேசத்தில் மிகவும் கூடுதலான வருமானம் நமது பிரதேசத்திலேயே பெறலாம் காரணம் தூண்கள், றான்ஸ்போமர்கள் அனைத்தும் நமது பிரதேச சபைக்குட்பட்ட இடங்களில்தான் போடப்பட்டிருக்கின்றது. நாம் அவர்களுடன் முறன்படாமல் நம்மிடம் தெரு விளக்கு கோட்டு வருபவர்களுக்கு நமது மின்குமிளைப் பொருத்திக் கொடுத்து அவர்களது வீட்டு மின் இணைப்பை பெற்று உபயோகிக்கலாம் என்பது எனது அபிப்பிராயமாகும்.

நீண்டநாள் குடியேற்றப்படாத, மீள் குடியேற்ற அமைச்சரும் நமது கையில் இருக்கின்றது. அங்கத்தவர்களுக்கு கிடைக்கின்ற பட்டியல் நமது சபை இல்லாவிட்டாலும் அடுத்த சபை இருந்தாலும் ஹிஜ்றாபுரம், வீரச்சோலை குளனியில் இருந்த பாடசாலை, பள்ளிவாசல், கோவில் அனைத்தையும் மீள் குடியேற்ற புனரமைப்புச் செய்ய வேண்டும். அவைகள் நீண்ட காலமாக எந்த ஒரு பிரயோசனமும் இல்லாமல் அவ்வாறே உள்ளது.

தயவு செய்து இங்குள்ளவர்கள் இந்த சபைக்கு அப்பால்பட்ட விடயம் என்று தட்டிக்களித்து விடாமல் இன்று இந்த நாட்டில் இருக்கின்ற பிரச்சினையையும் சபையினூடாக எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த வகையில் தோட்டத் தொழிலாளர்களின் போராட்டம் இன்று எமது நாட்டில் மிக முக்கியமான ஒரு போராட்டமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அதற்கு எமது சபையினாலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் வழங்க வேண்டும் என்ற பிரேரனையையும் நிறைவேற்றி நாங்கள் அனுப்ப வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

அத்தோடு திட்டமிடல் என்ற வகையில் நமது சபையிலும் சில முன்னுதாரணங்களை வைக்கலாம். சென்னல் கிராமம் 01 என்பது பாரிய பிரதேசம் அதற்குள்ளும் பாடசாலை அருகிலும் கழிவுகளைப் போடுகின்றார்கள். அதே போல் பெரிய பள்ளிவாசல் அருகிலும் அவ்வாறே நடக்கின்றது. அதற்கு அருகில் இருக்கின்ற ஆலையத்திற்கும் சொந்தமான இடம். மிருகவதைகளை வெறுக்கின்ற மக்கள் இருக்கின்ற போது பறவைகள், மிருகங்கள் அந்தக் கழிவுகளை அவர்களது வீடு வாசல்களில் போடுவதனால் மக்கள் அசௌகரியப்படுகின்றார்கள். அது மட்டுமல்ல செட்டைவட்டைக்குள்ளும் கழிவுகளைக் கொட்டுகின்றனர். கௌரவ உறுப்பினர் அவர்கள் கூறிய இடம் மிகவும் முக்கியமான இடம். அவ்விடத்திலும் சென்று குப்பை போடுகின்றார்கள். இவ்விடங்களை ஏதோ ஒரு வகையில்

முடிந்தளவு நாங்கள் OIC யிடமாவது கூறி அவ்வாறான இடங்களை இரவு 12 மணி அல்லது காலை 04 மணி அளவில் ஒரு றோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டால் அதனை ஒரு தீர்வுக்குள் கொண்டு வரலாம். இந்த விடயம் தொடர்பாக மக்கள் விளங்கிக் கொள்ளாமல் இருப்பதையிட்டு நான் மிகவும் மனவருத்தப்படுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, முதலில் நான் சந்தோசமான விடயத்தைக் கூற வேண்டும். சுகாதார இராஜாங்க அமைச்சரின் ஊடாக எனது கடமையில் இருந்து அவருடைய காரியாலயத்திற்கு விடுவிப்பு செய்து எடுத்ததற்கு எனது தலைவரின் அனுமதியோடு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு,

அபிவிருத்தி வேலைத்திட்டம் என்பதை அனைவரும் மிகவும் மனவருத்தமாக தெரிவிப்பதையிட்டு நானும் வேதனையடைகின்றேன். ஏனென்றால் உறுப்பினர்களுக்கூடாக போட்டி போட்டு ஒருவரை வெட்ட வேண்டும் என்றில்லாமல் உறுப்பினர்களுக்கு அப்பால்பட்டவர்கள்தான் இந்த வேலைகளைச் செய்கின்றார்கள். நாங்கள் எந்தளவு கஸ்ட்டத்திற்கு மத்தியில் பிரதேச சபைக்கு ஒரு முன்மொழிவினை எடுத்துச் சென்று அமைச்சரிடம் கொடுக்கின்றோம். அவ்விடத்திற்குச் சென்று அந்த வேலைகளைச் செய்ய வேண்டாம் என்று தடுப்பது மிகவும் மனவருத்தத்திற்குரிய விடயமாகின்றது. எனவே இந்த விடயத்தில் பிரதேச செயலகத்தையும் தொடர்பு கொண்டு அபிவிருத்தி வேலைகள் எது செய்வதென்றாலும் எங்கள் உறுப்பினர்களையும் கவனம் செலுத்தித்தான் அதற்குரிய எந்தவிதமான முன்மொழிவுகளும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே அன்மையில் நடந்த ஒரு விடயம் பாதை செப்பனிடப்பட்ட போது அதில் ஏற்பட்ட பிரச்சினைக்கு அந்த மக்கள் என்னைத்தான் அழைத்தார்கள் நான் அந்த இடத்திற்கு சென்ற போது எனக்கு மிகவும் மன வேதனை என்னவென்றால் அந்தப் பாதை பாரம் எடுத்துச் செய்கின்ற கொந்தராத்துக்காரர் என்னிடம் இவ்விடத்தில் நிற்காமல் வெளியில் போ என்று சொல்லும் அளவிற்கு அந்த இடம் அமைக்கப்பட்டு அந்த ஆட்களால் துரத்தப்படும் நிலை இருந்தது. ஆனால் பின்தங்கி வரவில்லை. இதற்குக் காரணம் என்னவென்றால் அந்த வேலையை பாரம் கொடுத்தவரின் பிழையா? அல்லது பிரதேச செயலகத்தின் பிழையா? அல்லது யாரால் ஏற்பட்ட பிழை என்று தெரிந்திருக்க வேண்டும்.

அன்மையில் அம்பாரையில் நடைபெற்ற வகுப்பில் பட்டியலில் வந்தவருக்கு 50 வீதமும் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு 30 வீதமும் அபிவிருத்தித் திட்டம் சபையில் ஒதுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குரிய சுற்று நிருபமும் இருக்கின்றது. இவ்வாறான நிலையில் பெண் உறுப்பினர் நிற்கத் தேவையில்லை என்று எங்களை உதாசீனப்படுத்தும் அளவிற்கு இந்த அபிவிருத்தி வேலைகள் அமைக்கக்கூடாதென்று நான் இந்த இடத்தில் கண்டிப்பாக கேட்டுக் கொள்கின்றேன். எமது கௌரவ உறுப்பினர் ஜிப்ரி அவர்கள் சென்ற போதும் நீ கட்சியைச் சார்ந்தவர் அல்ல இவ்விடத்தில் நிற்கக்கூடாது என்று அவரையும் விரட்டியிருக்கின்றனர். இந்த இடத்தில் கட்சி பேதம் பார்க்கக்கூடாது நாம் அனைவரும் ஓர் குடும்பமாக செயற்பட வேண்டும். ஒரு உறுப்பினர் பற்றி வேறு இடத்தில் பேசினால் அது அனைத்து உறுப்பினர்களையும் சாரும். மற்றவர் வந்து எங்களது வேலைகளை தட்டிப்பறிப்பதும் எங்களது முன்மொழிவுகளை தடைசெய்வதும் மிகவும் மனவேதனைக்குரியதாகும்.

வாய்கால் புனரமைப்பு பற்றி அனைவருக்கும் தெரிந்த விடயம். கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களும் அறிக்கை அனுப்புவதற்கு மிகவும் பாடுபட்டார். ஆனால் அன்மையில் அது பற்றி வினவிய போது மிகவும் மனவருத்தமாக இருக்கின்றது. எனவே தவிசாளர் அவர்களே இவ்வாறான விடயங்களை நீங்கள் கவனம் எடுக்க வேண்டும் என்றும்,

எனது வட்டாரத்திலே திண்மக்கழிவு அகற்றுவது சம்பந்தமாக உங்களிடம் ஏற்கனவே கூறியிருக்கின்றேன். எங்களது எரியாவில் சிறிய தொகையை அறவிட்டு அதற்கான நடவடிக்கையையும் நீங்கள் எடுக்க வேண்டும் என்றும், பெண்கள் வலுவூட்டலுக்கான பயிற்சி

நெறிகள் ஆரம்பிப்பதற்கு பெண்களுக்கான பக்க துணைகள் வழங்க வேண்டும் என்றும் மிகவும் தாழ்மையாக கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இவ்விடத்திலே இதற்கு முன்னர் கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் பேசிய பேச்சுக்கு நானும் முற்றாக உடன்படுகின்றேன். ஏனென்றால் வீதி விளக்கு பிரச்சினை என்பது எங்களுக்கு பாரிய பிரச்சினையாகும் சாதாரனமாக வளத்தாப்பிட்டி, மல்வத்தை பிரதேசமானது யானை உடனடியாக ஊடறுக்கும் பிரதேசமாகும். அதிலும் வளத்தாப்பிட்டிக்கும் மல்வத்தைக்கும் இடைப்பட்ட வயல் பகுதியிலே யானை ஊடறுத்து பின்னர் வளத்தாப்பிட்டியிலே சுற்றித்திருந்து விட்டு அதன் பின் மல்லிகைத்தீவு கரும்பு பாம் பகுதிக்குச் சென்று, மல்வத்தை பிரதேசத்திலே அட்டகாசம் செய்து சம்மாந்துறை, காரைதீவிற்கும் வந்து செல்கின்றது.

ஆனால் முதலில் வளத்தாப்பிட்டி பிரதேசத்தைத்தான் தாக்குகின்றது. இதற்கு விளக்குகள் தாருங்கள் என்ற கோரிக்கையை ஏற்கனவே முன்வைத்திருக்கின்றேன். வளத்தாப்பிட்டி கிராம சேவகர் பிரிவு என்பது சம்மாந்துறை பிரதேசத்திலே மிகவும் பாரிய கிராம சேவகர் பிரிவாகும். 1000 திற்கும் மேற்பட்ட குடும்பங்களும் 3000 க்கும் மேற்பட்ட மக்கள் தொகையும் இருக்கின்றது. புதிய வளத்தாப்பிட்டி, பழைய வளத்தாப்பிட்டி, பளவெளி, இஸ்மாயில் புரம் என 04 பிரிவுகள் உள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் உள்ள மக்கள் அதிகமாக முன்வைக்கும் கோரிக்கை வீதி மின்விளக்கு தரும்படியாகும். மின்சார சபையின் கெடுபிடி இருந்தாலும் சாதாரனமாக நகர்புறங்களை விட எல்லைக் கிராமங்கள் சூழ்ந்த பிரதேசமாகும். அதற்கு நாம் மின்வளங்களைக் கொடுப்பது அத்தியவசியமாக செய்ய வேண்டிய கடமையாகும்.

திண்மக்கழிவு பிரச்சினை தொரட்பாக, எங்களது பிரதேசத்திற்கும் நமது பிரதேச சபை வாகனங்கள் வந்து குப்பைகளை சேகரிப்பதில்லை. ஆனால் சம்மாந்துறை, கல்முனை போன்ற பிரதேசங்களில் இருந்து வாகனங்களில் வருபவர்கள் தங்களது ஊர் குப்பைகளை வீதியில் வீசிவிட்டு செல்கின்றனர். இது படித்தவர்களின் செயல் என்று பார்க்கின்ற போது மிகவும் மனவருத்தமாக இருக்கின்றது. எனவே, அதனையும் நாம் கட்டுப்படுத்த வேண்டும்.

சம்மாந்துறை பிரதேசம் 02 பிரதேச செயலகமாக பிரிக்கப்பட வேண்டும். சம்மாந்துறை நகர சபையாக வர வேண்டும். அதே சந்தர்ப்பத்தில் ஒரு பிரதேச சபையும் உருவாக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார் அதனை நாங்கள் வரவேற்கின்றோம். நாம் சம்மாந்துறை பிரதேச சபையை நகர சபையாக தரம் உயர்த்த வேண்டும் என்றால் எமது பிரதேசத்தின் நகர்பகுதிகளையும் ஒரு நகரத்திற்குரிய அங்கீகாரங்கள் அதற்கான கட்டமைப்புக்கள் முறையாக இருக்க வேண்டும். அங்காடி வியாபாரங்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டும். அதாவது அவர்களுக்கு ஒரு தள்ளுவண்டியைக் கொடுத்து வியாபார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அதனை அழகு படுத்த வேண்டும்.

அதற்கு மேலதிகமாக வீதிகளுக்கு பல அமைச்சுடன் தொடர்பு பட்ட கௌரவ உறுப்பினர்கள் இருக்கின்றோம். இவைகளினூடாக நகரத்தின் வீதிகளுக்கு அந்தக் கட்டமைப்புக்கள் செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்படும் பட்சத்தில் சம்மாந்துறை நகரத் தோற்றம் அழகூட்டிய நகரமயமாகும் என்பது எனது கருத்தாகும். அந்தவகையில் மணிக்கூட்டுக் கோபுரம் மிகவும் அழகான முறையிலே செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு முறையும் அவ்விடத்தால் செல்லும் போது இது நமது சபையினூடாக செய்யப்படுகின்றது என்று சந்தோசமடைகின்றோம். அவைகள் அனைத்தும் சேரும் போது சம்மாந்தறை என்ற நகரமாக மெருகேறக்கூடிய அதற்கான அடிப்படைக் கட்டமைப்பு பெறக்கூடிய ஒரு சூழல் நிச்சயமாக உருவாகும். எனவே, இவைகளைச் செய்ய வேண்டிய பொறுப்புத்தான் நமக்கு இருக்கின்றது. இந்த இடத்திலே இலங்கை மின்சார சபை வந்து மின்கட்டனம் கூடுதலாக செல்கின்றது அல்லது அதற்கான நிதியை சபையினால் செலவிடக்கூடிய சூழல் வருகின்றதென்ற கருத்துக்கள் வருவதென்பது நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆகவே, இந்தக்காலகட்டத்தில் நாங்கள் இதனைச் செய்திருக்கின்றோம் என்று அடையாளப் படுத்துவோமேயானால் நீங்கள் உத்தேசிக்கும் திட்டங்களுடன் நகர வீதியூடாக செல்வதுதான். அவ்வாறான மத்திய வீதிகள் மெருகூட்டப்பட வேண்டும். அதற்கான திட்டங்கள் ஒவ்வொருவர் மத்தியில் உதிக்க வேண்டும் என்பது எனது கோரிக்கை. இதன் அடிப்படையிலே நான் மல்வத்தை பிரதேசத்தின் மையத்திலே ஒரு மணிக்கூட்டுக் கோபுரத்தை எதிர்வரும் காலத்திலே அமைக்க வேண்டும் என்ற அவா இருக்கின்றது. அது மாத்திரமல்ல மல்வத்தை சந்தியில் இருந்து மல்வத்தை பாடசாலை வரைக்கும் வீதி விளக்குகளைப் பொருத்துவதற்கும் முயற்சிகளைச் செய்து வருகின்றேன். எனவே இவை அனைத்தும் கூடும் போதுதான் எங்களது பிரதேசம் பாரிய பிரதேசமாக, ஒரு நகரமாக அபிவிருத்தி அடையும் அதற்கான களம், சூழல் உருவாகும். இவ்வாறான முன்னெடுப்பை நாமும் முன்னெடுக்க வேண்டும் என்று கூறிக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் என். கோவிந்தசாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களுடைய பிரதேசத்தில் மின் விளக்குகள் பொருத்துவதில் பாரிய சிக்கல் இருக்கின்றது. 4000 மின்விளக்குகள் சபையிலே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றதென்று ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருந்தீர்கள். இதனை நாம் சீர் தூக்கிப்பார்க்கும் போது மேலதிகமான மின்விளக்குகள் பொருத்துவதில் சிக்கல்கள் இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

இருந்த போதிலும் நான் 03 நாட்களுக்கு முன் வவுனதீவு பிரதேச எல்லைக்குள் சென்றிருந்த போது மின்சாரமல்லாத ஒரு பிரதேசத்தில் ஒரு நீண்ட பாலத்தில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தது. அதற்கு மின்சாரம் எங்கிருந்து வருகின்றது என்று பார்த்த போது அதில் ஒவ்வொன்றிலும் சோலா கருவிகள் பொருத்தப்பட்டிருந்தது. அது எவ்வளவு செலவாகும் என்பது தெரியாது. அது செலவு குறைந்த திட்டமாக இருந்தால் எமது சம்மாந்துறையை சுற்றிவர யானைப்பிரச்சினை இருக்கின்ற காரணத்தினால் சுற்றிவர உள்ள பிரதேசங்களுக்கு சோலாபவர் கருவிகளைப் பொருத்தி மின்கம்பங்களை அதில் இட்டு செயற்படுத்தக்கூடிய ஒரு வாய்ப்பை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அது எங்களுக்கு சாத்தியமாக இருந்தால் அதனை நாங்கள் செய்து கொள்ளலாம். நமது சம்மாந்துறை கிழக்கு மாகாணத்தில் பாரிய விசாலமான பிரதேசம். அதிகமான மின்குமிள்கள் இணைக்கப்பட வேண்டிய பிரதேசம். அன்மையில் என்னிடம் ஒரு குடும்பத்தினர் வந்து அவரது வீதியில் 04 மின்கம்பங்கள் இருப்பதாகவும் அவைகளுக்கு மின் விளக்குகள் பொருத்தப்பட வில்லை என்றும் முறையிட்டார். இருந்தாலும் அதனை செயற்படுத்துவது கடினமாக உள்ளது. எனவே, மேற்கூறிய திட்டங்களைக் கொண்டு வந்தால் இப்பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களது உப தவிசாளர் கூறியதை உள்வாங்கியதாக இங்கு அங்காடி வியாபாரிகள் எங்களுடைய பிரதேசத்தில் அதாவது சந்தைக்கு முன்பாக பிரதேச சபையினூடாக இங்கு வியாபாரம் செய்யக்கூடாது என்ற பதாதை வைத்துள்ளனர். அதற்குக் கீழே இருந்து மீன், சோளம் போன்ற பல வியாபாரங்களைச் செய்து வருகின்றார்கள். ஆனால் இது சபைக்கு அவமானமாக இருக்கின்றது. இதற்கு நீங்கள் தயவு செய்து சட்ட நடவடிக்கை எடுத்து அதிலிருந்து அப்புறமாக வியாபாரத்தைச் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ். நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கல்லரிச்சல் மரைக்கார் வீதியில் இருக்கின்ற மக்கள் திண்மக்கழிவு ஏற்றுவதற்கு எமது வாகணங்கள் போகவில்லை என்று, மிகவும் அசௌகரியமான நிலையில் இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் கூறுகின்றார்கள் பிரதேச சபையில் இருந்து நிதி ஏதாவது அறவிட்டால் அதனை நாங்கள் செலுத்துகின்றோம் ஆனால் வாகனத்தை அனுப்பி திண்மக்கழிவுகளை அகற்றுங்கள். எங்களது ஏரியாவில் இருக்கின்ற மக்கள் அன்றாடம் தொழில், பள்ளிவாசல், பாடசாலை போன்ற வற்றுக்குச் செல்வதற்கு மிகவும் சிரமம்படுகின்றார்கள். இங்கிருக்கின்றவர்கள் கழிவுகளை அங்கு சென்று கொட்டுகின்றார்கள். எனவே, எமது திண்மக்கழிவு வாகனங்களை அந்தப்பிரதேசத்திற்கும் அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டு,

பிலாவடி லேனில் கொங்றீட் போடப்பட்ட வீதியில் உள்ள காணிகளில் மூடிகள் இல்லாமல் உள்ளது. அதனால் ஒரு வாகனம் செல்லும் போது மற்றய வாகனம் செல்வதற்குரிய வாய்ப்பு மிகவும் கஸ்டமாக உள்ளது. முடியுமானால் அந்தக் கான்களுக்க மூடியைப் போட்டுத்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 02ம் திகதி மட்டக்களப்பு கொம்மாந்துறையில் அரச உத்தியோகத்தர் ஒருவரால் பொது மகன் ஒருவர் நிர்வானப்படுத்தி அவரை அடித்துத் துன்புறுத்தி பிரச்சினையை ஏற்படுத்துவதற்காகவேண்டி செயற்பட்டனர். இடம்பெற்ற அந்த சம்பவத்தில் முஸ்லிம் என்ற ஒரு பொது மகன் நிர்வானப்படுத்தியது மட்டுமல்லாமல் அவரது புகைப்படத்தையும் வெளியாக்கி அவரை அவமானப்படுத்தியதை நமது சபையூடாக நாம் அனைவரும் கண்டித்து அதற்கான ஒரு ஆதரவான கடிதத்தை அனுப்ப வேண்டும் என்று நான் சபையோரின் முன்னிலையில் கேட்டுக் கொள்கின்றேன்.

வாழ்வாதாரங்களை வழங்கப்படும் போது எங்களது உறுப்பினர்கள் அழைக்கப்பட வேண்டும் என்று பிரதேச செயலகத்தில் கூற வேண்டும். வாழ்வாதாரங்களைக் கொடுக்கும் போது படங்களைப் பார்த்தால் பிரதேச சபை உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளரும்தான் அந்த இடத்திற்குச் செல்கின்றார்கள். பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் எங்களது வட்டார செயற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று சட்டத்தில் இடமில்லை. அவர்கள் வேட்பாளர்களாக இருக்கலாம். ஆனால் உறுப்பினர்களை அவமதிக்கக்கூடாது என்பதை நீங்கள் கூற வேண்டும் என்று தவிசாளர் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்கள் அனைவரினதும் கருத்துக்களை உள்வாங்கியவனாக, சபை ஏனைய நடவடிக்கைகள் முடிந்த பின் எனது பதிலைக் கூறுகின்றேன். உங்களுக்குத் தெரியும் டிசம்பர் மாதம் கணக்குகள் முடிக்க வேண்டிய மாதம் அதில் கணக்கறிக்கை தாமதமாகி உங்கள் கைக்குக் கிடைத்திருக்கின்றது. இந்த செலவீனங்களில் உங்களது எண்ணங்களை செலுத்தி என்ன வழிகளில் இந்த செலவுகளை மாற்றுவழி செய்யக்கூடிய கருத்துக்களைக் கூறலாம். உதாரணமாக வாகனத்திருத்தம் Tractor போன்றவைகளை நீங்கள் அவதானித்து உங்களுக்குள்ள அனுபவங்களை வைத்து உங்களது அறிவுரையாக கூறினால் உதவியாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வாகனத்திருத்தம் பொருட் கொள்வனவில் JX-7618, RB-0640 ஆகிய உழவு இயந்திரத்திற்கு உதிரிப்பாகம் கொள்வனவு 299,810.00 ரூபா அதே 02 உழவு இயந்திரங்களுக்கும் முழுமையாக திருத்தியமைக்கான கொடுப்பனவு 205,970.00 ரூபாவும் போடப்பட்டுள்ளது. அத்தோடு திண்மக்கழிவு இடமாற்றக் கட்டணம் 904,549.85 ரூபா போடப்பட்டுள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
02 Tractor களும் வேறாக வரும். திண்மக்கழிவு காரைதீவிற்கும் அட்டாளைச் சேனைக்கும் செலுத்துகின்ற பணம். ஒரு அமர்விலும் எமது வருமானம் தொடர்பாக யாரும் கதைப்பதில்லை.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களது கைகாட்டி சந்தைக்கு அன்மையில் உள்ள பழைய மாடு அறுக்கும் மடுவம் ஒன்று இருக்கின்றது. அது சபைக்குச் சொந்தமான கட்டடம் அதனை பெண்கள் சந்தையாக எடுத்தால் பெண்களுக்குரிய சந்தையாகவும் இருக்கும், சபைக்கும் வருமானம் வரக்கூடிய ஒரு வழியாகவும் இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் நான் 02 முன்மொழிவுகளை வைத்துள்ளேன். அவ்விடத்தில் நூலகமும் படிப்பதற்கான சிறிய மண்டபத்தினையும் நகர திட்டமிடல் அமைச்சிடம் ஒரு முன்மொழிவு செய்யலாம் என்ற எண்ணம் எனக்கு உள்ளது. தற்போதுள்ள அஸ்றப் நூலகத்தை பெருப்பிக்க முடியாது. அவ்விடத்தில் அரச நிதியினால் கட்டப்பட்ட ஒரு தாஜ்மஹால் உள்ளது. 3.2M அதனை நாம் ஒன்றும் செய்ய முடியாது. ஏதாவது செய்தால் பிரச்சினை உருவாகலாம் என்பதனால்தான் நானும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது நடைமுறைச் சாத்தியம் இல்லாத ஒன்று. இருக்கின்ற கட்டடத்தை உடைப்பதற்கு யாருக்கும் அனுமதி தரமாட்டார்கள். கைகாட்டி சந்தியில் தற்போது பாதையோரத்தில் வியாபாரம் நடைபெறுகின்றது. அவர்கள் அங்கு சென்று அதனை சந்தையாக உபயோகித்து 06 மாதம் அல்லது 01 வருடத்திற்கு பயன்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் அதனை துப்பரவு செய்து பயன்படுத்தலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நானும் மடுவம் சம்பந்தமாக கூறியிருக்கின்றேன். அந்தப் பகுதியில் உள்ள மக்களின் கல்வி வளர்ச்சிக்காக அதனைப் பயன்படுத்துவதுதான் மிகவும் சிறப்பாக இருக்கும். சந்தை மற்ற மற்ற விடயங்களுக்கு வேறு இடங்களைத் தெரிவு செய்யலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கல்வி அமைச்சுக்கு ஒரு முன்மொழிவைக் கொடுப்போம். அது வரும்வரை மாற்றுத் தேவைக்காகப் பாவிக்கலாம்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இவ்விடத்தில் 03 விடயங்கள் தெளிவில்லாமல் உள்ளது. சுகாதார ஊழியர்களுக்கான 03 மாத லைபோய் கொள்வனவு 57,500 ரூபா அலுவலகத்தில் CCTV கமரா முழுமையாக பொருத்தியமைக்கான கொடுப்பனவு 129,560 ரூபாவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைப் பொருத்தி முறையாக செயற்படுத்தப்படாவிட்டால் அதனைப் பொருத்தவதில் அர்த்தம் இல்லை. கடந்த காலங்களில் பொருத்தப்பட்டு அது முறையாக பராமரிக்கப்பட வில்லை. செலவுகள் வீனாகப் போகாமல் அதனைப்பார்க்க வேண்டும். VC பொது நூலகத்திற்கான 06 மாதத்திற்கான வாடகை போடப்பட்டுள்ளது. அது எங்குள்ளது? அது நமது கட்டடமில்லையா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஒவ்வொரு ஊழியருக்கும் ஒவ்வொரு மாதமும் லைபோய் சோப் கொடுக்கப்படும். செலவுகள் வீனாகப் போயிருந்தால் நிச்சயமாக நீங்கள் சுட்டிக்காட்ட வேண்டும். ஆனால் CCTV கமரா நிர்வாகம் செய்வதற்கு எவ்வளவு உதவுகின்றது என்பது தெரியும். இது கடந்தகால சபையில் செய்யப்பட்டது 03 வருடத்தில் இடம்பெற்ற பிழைதான் இது. அதற்காக அதனை அவ்வாறு விடாமல் சரி செய்தோம். சபூர் சனச கட்டடத்தில் VC பொது நூலகம் 03 வருடமாக இயங்கி வருகின்றது. ஆரம்பத்தில் எமது சபை இருக்கின்ற கட்டடத்தில்தான் இருந்தது. அதற்கு பொது இடத்தைத் தேடி நூலகம் கட்ட வேண்டும். MPCS வளவிற்குள் நூலகம் கட்டலாமா என்று ஒரு சிலரின் அபிப்பிராயம் இருக்கின்றது.

**தீர்மானம் 04**

சென்ற மாதம் 03.12.2018 தொடக்கம் 31.12.2018 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

**தீர்மானம் 05**

எமது பிரதேச சபையின் பராமரிப்பிலுள்ள விளையாட்டுக் கட்டடத் தொகுதியில் கூட்ட மண்டபம், நீச்சல் தடாகம், கைப்பந்து விளையாட்டுக் கட்டடம் என்பவற்றைப் பாவிக்கும் போது சபையின் கௌரவ உறுப்பினர்கள், சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு கட்டடணத்தில் 50 வீத கழிவுடன் சலுகைக்கட்டணம் அறவீடு செய்ய சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

**தீர்மானம் 06**

தற்போது நிதி உதவியாளராக கடமையாற்றும் ஜனாப். AJM.ஜெஸீல் என்பவர் சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாடு செல்வதால், அவருக்குப் பதிலாக நியமிக்கப்படும் ஜனாபா.YB.கதீஜா உம்மா (அபிவிருத்தி உத்தியோகத்தர்) என்பவரை நிதி உதவியாளராக நியமிப்பதற்கும், அதற்கான கொடுப்பனவை வழங்குவதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

புதிதாக தாபிக்கப்பட்ட கல்லரிச்சல், கைகாட்டி பூங்காவை பாரம் எடுத்து பராமரிப்பதற்கு நிரந்தர ஊழியர்களை நியமிப்பதற்கு ஆளணி கேட்டுள்ளோம் அனுமதி வந்தால்தான் அதனை செய்ய முடியும். அதனால் அந்தப் பகுதியில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு பராமரிப்பதற்கு கொடுத்து அதற்கான செலவு சபையினால் வழங்கலாமா? காரணம் அதற்கு ஒரு ஊழியர் போட முடியாது. 02 பேர் போட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அந்த நியமனத்தை சபையால் செய்தால் சிறப்பாக இருக்கும். அந்தப் பிரதேசத்தில் இருப்பவருக்கு முன்னுரிமை வழங்கி சபையினால் கொடுத்தால் எதிர்காலத்தில் தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் இது மக்களுக்கு கிடைக்கின்ற ஒரு சந்தர்ப்பம். அனுமதியைப் பெற்றுக் கொடுக்கலாம். அந்தப் பூங்காவிற்கு நிதிகளைப் பெற்றுத் தந்தவர்கள் அதற்காக முயற்சித்தவர்கள் அந்தப் பிரதேசத்தில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கலாம் என்பது எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

பூங்காவுக்கென்று ஒரு ஆளணி இல்லை. நாங்கள் கேட்டுள்ளோம் ஆனால் ஆளணி இல்லாத இடத்தில் நிமித்த அடிப்படையில் தொழிலாளியாக அனுமதி எடுக்க வேண்டும். முன்னுரிமை வழங்குவதில் பிரச்சினை இல்லை. ஆனால் கௌரவ உறுப்பினர்களாக உங்களது கருத்துக்களைத் தெரிவிக்கும் போது நீங்கள் அரசியல் பக்கமாக மாத்திரம் பார்க்காமல் சபைக்கு வருகின்ற வருமானத்தையும் சிந்திக்க வேண்டும். வருமானம் இல்லாமல் செலவு செய்ய முடியாது. ஊழியர்களைக் கூட்டுவதென்பது மிகவும் சிரமமானதொன்று. ஆளணி இல்லாமல் நாம் ஒரு நியமனம் வழங்கினால் சபை மூலம் சம்பளம், ETF, EPF கொடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சனசமூக நிலையங்களுக்கு கொடுக்கின்ற போது அவர்கள் அதனை யாரிடம் பாரம் கொடுப்பது என்ற ஒரு விடயம் உள்ளது. அதைவிட கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் அவர்கள் கூறியது போன்று ஒவ்வொரு பூங்காவிற்கும் 02 பேரை சபையினால் சிறிய சம்பளத்திற்காவது நியமித்தால் சிறப்பாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் அவர்களின் கருத்துக்மைவாக சபைநியமனம் செய்ய முடியுமானால் சந்தோசமாக அனைவரும் ஆட்களை சிபார்சு செய்து நியமிக்கலாம். ஆனால் சட்ட திட்டங்கள் இருக்கின்றது அதனையும் பார்க்க வேண்டும். ஆனால் இன்று இருக்கின்ற தகவல் அறியும் சட்டமூலம் பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டும். அதன்மூலம் ஒருவர் இது என்ன அடிப்படையில் நியமித்தீர்கள் என்று என்னிடம் கேட்கலாம். அவ்வாறு கேட்டால் எனது பதில் சட்டத்திற்குள்தான் இருக்கலாம். இதனை மறைமுகமாக வேறுவளியில் சொல்லலாம். ஆனால் அவ்வாறான தீர்மானம் எடுக்க முடியாது.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எந்த ஒரு விடயத்திலும் உங்களுக்கு பாதகமாக வந்தால் நாங்கள் அனைவரும் மும்மூரமாக செயற்படுவோம். எங்களது சபைக்கென்று வருமானத்தை தேடுவதற்கான ஒரு தேவையும் நமது சபையின் சூழலுக்கு ஏற்றவாரு இசைவாக்கமாக தீர்மானம் எடுக்கக்கூடிய தற்துனிவும் நமது சபைக்கு இருக்கின்றது. உங்களை தனியாக மாட்டிவிட்டு நாங்கள் விலகிக் கோள்வோம் என்று எந்த சந்தர்ப்பத்திலும் நீங்கள் நினைக்கக்கூடாது. சபையைப் பொறுத்தவரையில் சபை அங்கீகாரத்தில் உங்களைப் பாதுகாப்பதில் நாங்கள் அனைவரும் உறுதியாக இருப்போம் என்று; என்னைப் பொறுத்தவரையில் நான் சபை உறுப்பினர்களின் நம்பிக்கையில் கூறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தற்போது நடைபெறுகின்ற கருத்தின் பிரகாரம் நீங்கள் தெளிவான முடிவுடன் இருக்கின்றீர்கள். ஒரு ஊழியரை நியமிப்பதென்றால் சபை ஊழியரை நியமித்தாலும் அவர் 180 நாள் வேலை செய்தால் அவர் தன்னை நிரந்தரமாக்க வேண்டும், சம்பளம் என்ற பல பிரச்சினைகள் ஏற்படலாம். எனவே எங்களது பிரதேசங்களின் மக்கள் பிரதிநிதிகள் சபையில் இருக்கின்றார்கள். அவர்கள் அந்தப் பகுதியை நிர்வகிக்கக் கூடியவர்கள். அந்த பிரதேச உறுப்பினர்கள் ஊடாக அந்தப் பிரதேசத்தில் உள்ளவர்களை சனசமூக நிலையங்களின் அடிப்படைக்குள் எடுத்து இவர்களை நியமிப்பது சிறப்பாக இருக்கும். அவ்வாறு செய்தால் சட்டப்பிரச்சினைக்குள் வராது என்பது எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் சனசமூக நிலையத்திற்கு கொடுப்பதற்கு முன்வைத்த காரணம் நாம் எது செய்தாலும் சட்டபூர்வமாக இருக்க வேண்டும் என்பதனால்தான் நாம் செய்வதென்றால் விண்ணப்பங்களைக் கோரி, நேர்முகப்பரீட்சை நடாத்தி உள்ளூராட்சி ஆணையாளரிடம் அனுமதி பெற்று நியமிக்க வேண்டும். அவ்வாறு நியமித்தால் 180 நாள் தொடர்ந்து இருக்கும் போது நிரந்தர நியமனத்திற்கு தகுதியடைகின்றார்கள். அதனைச் செய்யலாம். நானும் செயலாளரும் 02 மாத காலமாக ஆளணி விபரங்களை செய்து வருகின்றோம். அதற்கு அனுமதி கிடைத்தவுடன் அனைத்தும் சம்பூரணமாகும்.

**தீர்மானம் 07**

புதிதாக தாபிக்கப்பட்டுள்ள கல்லரிச்சல் மற்றும் கைகாட்டியடி சிறுவர் பூங்காக்களின் பராமரிப்பனை மேற்கொள்ள அந்தந்த பகுதியில் இருப்பிடமாகக் கொண்ட தகுதியுள்ள நபர்களை உள்வாங்கி நேர்முகப்பரீட்சை நடாத்தி நான்கு பேரைத் (04) தெரிவு செய்வதற்கும் அதுவரைக்கும் தற்காலிகமாக எமது சபையில் உள்ள தொழிலாளிகளை நியமிப்பதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

20 GS பிரிவுகளில் உள்ளவர்களிடம் சோலை வரி அறவீடு செய்யப்படுகின்றது. மற்றயவர்களுக்கு உரிய நடவடிக்கை செய்துள்ளோம். அதற்கிடையில் திண்மக்கழிவுக் கட்டணம் சென்ற சபையில் அறவிடப்பட்டது. சபை இல்லாத காலப்பகுதியில் அது நிறுத்தப்பட்டுள்ளது. அதனை மீண்டும் ஆரம்பித்து அவைகளைச் செயற்படுத்த வேண்டும். நம்மிடம் உள்ள வாகனங்கள் திண்மக்கழிவுகளை அகற்றுவதற்கு போதாமல் உள்ளது. இதற்கு மேலதிகமாக வாகனங்கள் வாடகை மூலமாக எடுக்க வேண்டியும் வரலாம். நாங்கள் அமைச்சிடம் கேட்டுள்ளோம். அது கிடைக்காவிட்டால் மார்ச் அல்லது ஏப்ரல் மாதம் சபையில் தீர்மானம் எடுத்து Tractor களை Local Government Loan மூலம் செய்ய வேண்டும். கௌரவ இராஜாங்க அமைச்சர் ஹரீஸ் அவர்களிடமும் 02 Compactor கேட்டுள்ளேன். இந்த விடயங்களை 10 மாதகாலமாக 02 பயிற்சியாளர்கள் செய்து வருகின்றனர் அவர்களை 06 மாத காலத்திற்கு பதிலீட்டு அடிப்படையில் உள்வாங்க வேண்டும்.

**தீர்மானம் 08**

தற்போது சோலை வரி அறவீடு செய்யப்படும் 20 கிராம சேவையாளர் பிரிவுகளிலுமுள்ள ஆதன வரி அலகுகளின் (10800) விபரங்களை eLG திட்டத்தில் ICTA நிறுவனத்தினால் கணனி மயப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது. இப்பணியில் எதுவித கொடுப்பனவுமின்றி இரு பயிலுனர்கள் பணிபுரிகின்றனர். அவர்களுக்கு 06 மாத தற்காலிக பதிலீட்டு அடிப்படையில் அலுவலக உதவியாளராக நியமனம் வழங்குவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

**தீர்மானம் 09**

சீருடை பெறத் தகுதியான சாரதி மற்றும் ஊழியர்களுக்கு சீருடை பெற்றுக் கொடுக்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

கே.எம். இன்பவதி

**தீர்மானம் 10**

தொழில் பயிற்சி நிறுவனங்களில் இருந்து பயிற்சி பெற 06 பயிலுனர்களை பயிற்சிக்காக (பயிலுனர்களாக) சேர்த்துக் கொள்வதற்கும் சபை நிதியில் இருந்து 04/2017 இலக்க சுற்று நிருபத்திற்கமைய மாதாந்த கொடுப்பனவு வழங்கவும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சபைக்குச் சொந்தமான 02 பவுசர்களையும் (Water Tanker) தற்போது இருக்கும் இடத்தில் அவசர தேவை வரும்போது அதனை எடுப்பதற்கு மிகவும் சிரமமாக இருப்பதனால் அப்துல் மஜீட் மண்டபத்தில் இலகுவாக எடுப்பதற்காகவும், நிறுத்தி வைப்பதற்காகவும் கராஜ் ஒன்றை அமைக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 02 புவுசர்களும் தற்போது பழைய பிரதேச சபை கட்டடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அது இருக்கின்ற தூரத்திற்கும் அப்துல் மஜீட் மண்டப கட்டடம் இருக்கின்ற தூரத்திற்கும் சிறிய வித்தியாசம்தான் உள்ளது. இதே செலவீனத்தை மேற்கொண்டு ஒதுங்குப்புறமான இடத்தை பழைய அலுவலகத்திலேயே செய்ய முடியாதா? ஏனென்றால் அப்துல் மஜீட் மண்டபம் அமைந்திருக்கின்ற இடத்தில் எதிர்காலத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு அதனை அடையாளச் சின்னமாக வைத்து திட்டங்களைத் தீட்ட வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

சம்மாந்துறை மண்ணில் பிறக்க இருக்கின்ற எதிர்கால சமூகங்களைக் கருத்தில் கொண்டு ஹிஜ்றா சந்தியை மையமாக வைத்துத்தான் அனைத்தையும் அமைக்க வேண்டிய திட்டமாக இருக்கின்றது. அப்துல் மஜீட் மண்டபத்திற்கு அன்மையில் இருக்கின்ற பல்நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான காணியைக்கூட நாங்கள் உள்வாங்கியதாகத்தான் சம்மாந்துறைக்கான எதிர்கால அபிவிருத்தி திட்டத்தை வைக்கின்ற போது அந்த இடம்தான் அரசாங்கத்திற்குரிய பொது நிலமாக இருக்கின்றது. எனவே அவ்விடத்தில் அத்திட்டத்தை தவிர்த்து இப்போது இருக்கின்ற இடத்தில் இந்தத் திட்டத்திற்கு கீழ் அதனை செய்து இந்த வாகனங்களை அங்கு நிறுத்துவது சாலப் பொருத்தம் என்பது எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அப்துல் மஜீட் மண்டபம் பற்றி நீங்கள் கூறியவைகளை நான் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் இந்த முடிவு எடுத்ததற்குக் காரணம் அவ்விடத்தில் இடவசதி இல்லாததனால் தான். தற்காலிகமாக வைப்பதற்குத்தான் இந்த விடயத்தை முன்வைத்தேன். அதனை எலும்பு அரைக்கும் ஆலையத்தில் கராஜ் அமைத்து போடலாம் என்று நான் நினைத்தேன். ஆனால் அந்த இடத்தக்குச் செல்லும் பாதை சீரற்றுக் காணப்படுகின்றது அதனைத்திருத்த வேண்டும் என்பதனால்தான் அப்பாதை செய்ததும் அதனை அங்கு செய்யலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கம்பரலிய திட்டத்தின் கீழ் அதிகமான பணம் வர உள்ளது. அந்தநேரம் அந்தப்பாதையை போட்டு அதனை அங்கேயே நிறுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று நினைக்கின்றேன். அதனோடு ஒரு கலிபவுசருக்கும் நான் வேண்டுகோள் விடுத்திருக்கன்றேன் அதுவும் வந்தாலும் அங்கேயே அதனையும் நிறுத்தலாம்.

**தீர்மானம் 11**
அசாதாரன நிலமைகளின் போது எம்மிடம் உள்ள 02 பவுசர்களையும் (Water Tanker) பயன்படுத்துவதற்கு இலகுவாக நிறுத்தி வைப்பதற்கு எலும்பு அரைக்கும் ஆலைய வளவில் தற்காலிக கராஜ் ஒன்றினை தயாரிக்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வாகனங்கள் அதாவது Tractor கள் ஆலங்குளத்திற்கு நமது திண்மக்கழிவுகளை எடுத்துச் செல்கின்றது. அந்த நேரத்தில் ஏதாவது திடீர் விபத்துக்கள் ஏற்பட்டால் அதனை திருத்தி வருவதற்கு Three Wheeler Cap ஒன்றைக் கொள்வனவு செய்ய வேண்டும்.

**தீர்மானம் 12**

திண்மக் கழிவகற்றல் மற்றும் சேவைகளில் ஈடுபடும் சபையின் வாகனங்களின் திடீர் Break Down சேவைக்காக Mahindra Three Wheeler Cap ஒன்றை கொள்வனவு செய்யவும், அதற்குரிய Tools Kits, Tyre+ றிம் Set, ஜக்,air Compressar மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்களையும் பெற சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

வீட்டில் உள்ள மரங்களை வெட்டி வீதியில் வைத்து அவைகளை எடுத்துச்செல்லுமாறு நமது ஊழியர்களிடம் பிரச்சினை செய்கின்றனர். இவைகள் மாற வேண்டும். இவைகளுக்கு உங்களது ஆதரவு இல்லாமல் தனியாக என்னால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. இந்த மரக்குப்பைகளை நாம் பாவிக்க முடியும். என்றாலும் ஒருவர் எவ்வளவு கழிவுகளைக் கொடுக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு இருக்க வேண்டும். அதற்காகத்தான் மரங்களைத் துண்டாக்குவதற்கு Shredder ஒன்றைக் கொள்வனவு செய்ய வேண்டும். ஆனால் தயவு செய்து உங்களது வட்டாரங்களில் உள்ள மக்களுக்கு இது தொடர்பான விளக்கங்களை தெளிவு படுத்துங்கள். துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டுள்ளது.

**தீர்மானம் 13**

Compost Yard இன் சேதனைப் பசளை தயாரிப்பிற்காக பயன்படுத்தப்படும் தாவரக் கழிவுகளை சிறு சிறு துண்டுகளாக வெட்டுவதற்கான இயந்திரம் Jinasana (Shredder) கொள்வனவு செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**தீர்மானம் 14**

திண்மக்கழிவு அகற்றும் வீதிகளில் மாதத்திற்கொரு தடவையாவது வாகனத்திற்குப் பின்னால் வீடியோ குழு ஒன்றை அனுப்பி அதனைப் படமாக்கி எடுத்து அன்றய குப்பைகள் அனைத்தும் பிரதேச செயலகத்தின் அனுமதியுடன் ஆலையடி வட்டைக்குள் கொட்டி அதனை படம் எடுத்து அந்த வட்டார மக்களையும் அழைத்து இன்று நாங்கள் சேகரித்த குப்பைகள் என்று மக்களின் முகங்களை மறைத்து காட்டுவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று காலையில் நான் வரும்போது நிகழ்ந்த சம்பவம் என்னவென்றால் திண்மக்கழிவு வாகனங்கள் வந்த போது இரண்டு கழிவுகளையும் சேர்து ஒன்றாக வைக்கின்றனர். கல்வி கற்றவர்களும் அதைத்தான் செய்கின்றனர். அதனால் பள்ளி வாசல்களுக்கு ஒவ்வொரு டஸ்பின் வைத்தது போன்று ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் வழங்கினால் சிறப்பாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன். காரணம் பிள்ளைகளுக்கும் அதனைக் கற்றுக் கொடுத்தால் அதனை அவர்கள் வீட்டில் உள்ள தாய், தந்தைகளுக்கும் கற்றுக் கொடுப்பார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இந்தத் திட்டம் முன்னர் நடைமுறையில் இருந்தது. அதனை மீண்டும் பாடசாலைகளில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்.

LADPDP தொடர்பாக இந்த மாதத்திற்குள் கௌரவ உறுப்பினர்கள் அக்கரை கொண்டு அதனைச் செய்து தர வேண்டும். உங்களது வட்டாரங்களில் இந்த வருடத்தில் செய்ய வேண்டிய அபிவிருத்தி வேலைகளை இணங்கண்டு முன்னுரிமைப்படுத்த வேண்டும். இவை தொடர்பாக நான் பிரதேச செயலாளரிடமும் பேசியுள்ளேன். SAO, EDO, கௌரவ உறுப்பினர்கள், சனசமூக அமைப்புக்கள் அனைத்தும் இணைந்து அதற்கான திட்டங்களை ஒழுங்குபடுத்த வேண்டும்.

**தீர்மானம் 15**

Local Development Support Project (LDSP) இவ்வருடம் முதல் நடைமுறைப் படுத்தப்படவிருப்பதால், எமது பிரதேசத்தில் குறித்த திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும், சம்மாந்துறை பிரதேச செயலகத்துடன் இணைந்து வட்டார ரீதியாக VDP திட்டம் தயாரித்து, LADPDP தயாரிக்க 10 கூட்டங்களை நடாத்தவும், அதற்காக ஏற்படும் உபசரணைச் செலவுகளை சபை நிதியில் இருந்து வழங்குவதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

மர்ஹூம் Dr மீராலெவ்வை அவர்களின் குறிப்புக்களை மையமாக வைத்து தென் கிழக்கு பல்கலைக்கழக ஸ்தாபக உப வேந்தர் பேராசிரியர் MLA.காதர் அவர்களால் தொகுக்கப்பட்ட ‘சம்மாந்துறையின் சரித்திரம்’ எனும் நூலை கொள்வனவு செய்து எமது பொது நூலகங்களுக்கும், எமதூரிலுள்ள பாடசாலைகளுக்கும், கௌரவ உறுப்பினர்களுக்கும் வழங்கலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, ஊர் பற்றிய வரலாறு எழுதப்பட்டுள்ளது. அவை அனைவரிடமும் இருக்க வேணடும். அந்த வகையில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தது 10 புத்தகங்களாவது சபையால் கொடுத்து அதனை வாசிக்க தூண்ட வேண்டும் என்பது எனது முன்மொழிவு.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்தப் புத்தகங்களை இரட்டிப்பாக கெள்வனவு செய்தாலும் பிரச்சினை இல்லை. ஏனென்றால் மாகாணசபை, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அதற்கான நிதி இருக்கின்றது. அதிலும் அவர்கள் இந்தப் புத்தகங்கனளை வாங்கி பாடசாலைகளுக்கும், கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்கள் கூறியவாறு அதனை மக்கள் மயப்படுத்தலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நாம் முதலில் 200 புத்தகங்களைக் கொள்வனவு செய்வோம். பின்னர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இதே சந்தர்ப்பத்தில் அல் ஹசனாத் எனும் சஞ்சிகை தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கின்றது. அதனையும் நமது சபையினால் பாடசாலைகளுக்கும் நூலகங்களுக்கும் பெற்றுக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன். இன்று இந்தப் புத்தகங்களை யாருக்கு வழங்க வேண்டும் என்று நினைக்கின்றோமோ அவர்களுக்கு இந்த சஞ்சிகைகளையும் வழங்கினால் மக்கள் வாசிப்பதற்கு இலகுவாக இருக்கும் என்ற முன்மொழிவையும் சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அல் ஹசனாத் பிரசுரம் பற்றிக் கூறுகின்றீர்கள். நமது சபையினால் ஏதாவது ஒன்றை முன்னெடுக்கும் போது எந்தப் பக்கச்சார்பும் இல்லாமல் நடுநிலை வகிக்கின்ற ஒரு விடயமாக

இருக்க வேண்டும். நிச்சயமாக ஜம்மியத்துல் உலமாவின் கருத்துக்களை உள்வாங்கி அவர்கள் அதற்கு அங்கீகாரம் தந்தால் நாம் அதனை முன்னெடுக்கலாமே தவிர நாம் தனியாக முடிவெடுக்க முடியாது.

**தீர்மானம் 16**

மர்ஹூம் Dr மீராலெவ்வை அவர்களின் குறிப்புக்களை மையமாக வைத்து தென் கிழக்கு பல்கலைக்கழக ஸ்தாபக உப வேந்தர் பேராசிரியர் MLA.காதர் அவர்களால் தொகுக்கப்பட்ட 'சம்மாந்துறையின் சரித்திரம்' எனும் நூலை (200 புத்தகங்கள்) கொள்வனவு செய்து எமது பொது நூலகங்களுக்கும், எமதூரிலுள்ள பாடசாலைகளுக்கும், கௌரவ உறுப்பினர்களுக்கும் வழங்குவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

எதிர்வரும் பெப்ரவரி 04 ம் திகதி சுதந்திரதினம் வருகின்றது. அதனை ஒரு வித்தியாசமான முறையில் கொடியேற்றத்துடன் மஹல்லா மஹல்லா மையவாடியில் மற்ற சபைகளின் வாகனங்களையும் எடுத்து ஒரு சிரமதானமும், மரம் நாட்டும் விழாவும் செய்து அதனை ஒரு பூங்காவாக மாற்றுகின்ற திட்டத்தை அன்றயதினத்தில் ஆரம்பிக்கலாம். அனைத்து உறுப்பினர்களும் பெண்கள் உட்பட உங்களது சகாக்களுடன் பங்கு பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**தீர்மானம் 17**

எதிர்வரும் பெப்ரவரி 04 ஆம் திகதி சுதந்திர தின நிகழ்வை முன்னிட்டு, பிரதேச செயலகம், நம்பிக்கையாளர் சபை ஆகியவற்றுடன் இணைந்து மஹல்லா மஹல்லாவில் அமைந்துள்ள மையவாடியில் சிரமதானம், மரநடுகை செயற்திட்டத்தினை மேற்கொள்வதற்கும் அதற்குரிய எரிபொருள் மற்றும் உபசரணை செலவுகளை மேற்கொள்வதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

எமது சபையில் ஏற்கனவே 06 பயிற்சியாளர்களை எடுத்து விட்டோம். திட்டமிடல் பிரிவில் மதிபீட்டு அறிக்கைள் போன்ற வேலைகளைச் செய்வதற்காக QS முடித்த 04 மாணவர்கள் கொடுப்பனவுகள் எதுவுமின்றி பயிற்சிக்காக வருகின்றனர். அவர்களுக்கு பிரயான ஊக்குவிப்பாக மாதம் 5000 ரூபா கொடுப்பனவு 06 மாத காலத்திற்கு கொடுக்கலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, 5000 ரூபா போதாது 10000 ரூபா வழங்கினால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, பயிற்சியாளர் விடயத்தில் எனது மகளையும் அரசாங்க நிறுவனங்கள், திணைக்களங்களுடாக நான் அதனை செய்வதற்கு முயற்சி எடுத்தேன் எந்த ஒரு திணைக்களத்திலும் மிகவும் எழிதான முறையில் கொடுப்பனவு மூலம் அவர்கள் உள்வாங்கவில்லை. அதற்கான நிதி ஒதுக்கீட்டில் உள்ள சிறய தொகையைத்தான் வழங்கி குறிப்பிட்ட சில காலத்திற்கு பயன்படுத்துகின்றனர். அது முடிந்தவுடன் இலவசமாகத்தான் போகவேண்டி இருக்கின்றது. எனவே, இங்கு கூறுவது போல் 10000 ரூபா கொடுப்பனவாக வழங்க எக்காரணங் கொண்டும் நமது பிரதேச சபை நிதியை தேவையற்ற முறையில் பயன்படுத்த பொருத்தமற்றதாக இருக்கின்றது. எனவே 5000 ரூபாவிற்கு மேல் வழங்குவதாக இருந்தால் அது

திணைக்களங்களால் செய்யப்படுகின்ற பயிற்சி விடயத்தை எவ்வாறு இந்த மக்களுக்கு நியாயப்படுத்துவீர்கள். எனவே, 5000 ரூபாவிற்கு மேல் வழங்க முடியாது என்பது எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் உணர்வுகளுக்கப்பால் சிந்திக்க வேண்டும். கௌரவ உறுப்பினர் யூசுப் லெவ்வை அவர்கள் சரியான விளக்கத்தை தந்தார். இது அந்த நிறுவனத்தின் நிதியில் இருந்துதான் கொடுக்க வேண்டும். அரசாங்கம் தருவதில்லை. இவர்களுக்கு பயிற்சி கொடுப்பதனால் அவர்கள் அதன் மூலம் நன்மையடைகின்றனர். பல இடங்களில் ஒன்றும் கொடுப்பதில்லை. காரணம் அவர்களது வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடுகள் இல்லை. அதனை நான் செயலாளருடன் கலந்தாலோசித்து சட்டத்திற்குள் எது பொருத்தமானதோ அதனைச் செய்கின்றோம்.

**தீர்மானம் 18**
திட்டமிடல் பிரிவில் QS முடித்த மாணவர்கள் பயிற்சிக்காக வருகின்றனர். அவர்கள் 04 பேருக்கும் பிரயான ஊக்குவிப்பாக மாதம் 6000 ரூபா கொடுப்பனவு 06 மாத காலத்திற்கு வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**தீர்மானம் 19**
JCB வாகனத்திற்கு Starter Motor, Fan Pulley Assy, Tensioner போன்றவற்றைக் கொள்வனவு செய்ய சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நமது சபையில் Motor Grade, JCB இரண்டிற்கும் ஒரே ஒரு சாரதிதான் இருக்கின்றார் இதனால் ஒரே நேரத்தில் இரு வாகனங்களும் தேவைப்பாட்டால் எடுக்க முடியாத நிலை உருவாகின்றது. இரண்டில் ஒன்றைத்தான் எடுக்கக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது. இதனால் எமக்கு அசௌகரியமாக இருக்கின்றது. இதற்கு இருக்கும் உழியர்களில் தகுதியானவர்களை நியமிப்பது சிறப்பாக இருக்கும் என நான் நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந்தக் கட்டளையை நான் ஏற்கனவே கொடுத்துள்ளேன். வாகனங்களுக்கு நாம் பயிற்சி வழங்க முடியாது. அவர்கள் அம்பாரையில் அதற்கான பயிற்சி நிலையம் உள்ளது. அதில் சான்றிதழைப் பெற்று வருபவர்களுக்கு அதனை வழங்குவோம் என்று அவர்களிடம் கூறியுள்ளோம். தற்போதுள்ள சாரதிக்கு மாத்திரம்தான் அந்தச் சான்றிதழ் உள்ளது. அதனால்தான் அவருக்கு அவைகள் வழங்கப்படுகின்றது. அவர் அதனை சிறந்த முறையில் பராமரித்ததனால்தான் 05 வருடமாகியும் பாரிய திருத்தங்கள் வராமல் அந்த சேவைகளைச் செய்து வருகின்றோம்.

உயர்தர பெறுபேறு, சாதாரணதரப் பெறுபேறு, 5 ஆந் தர பெறுபேறுகள் வந்தவுடன் நாம் பாராட்டு விழா வைத்து பொன்னாடை போற்றி அதற்கான நிகழ்வுகளைச் செய்கின்றோம். ஆனால் அதற்கு அப்பால் பல சவால்களை அந்த மாணவர்கள் எதிர்கொள்கின்றனர். அந்த கௌரவிப்பு அவர்களுக்கு மன சந்தோசத்தையும் பெற்றோருக்கு கௌரவத்தைக் கொடுத்தாலும் அதற்கு அப்பால் தான் ஏனைய சவால்கள் ஆரம்பிக்கின்றது.

பல்கலைக்கழகங்களுக்குச் செல்கின்ற மாணவர்களுக்கு முதல் சவால் அதற்கான சூழல். நாட்டில் இருந்து பல பகுதிகளிலும் பலதரப்பட்ட மாணவர்கள் வருகின்றனர். மொழி, ஆடை, போன்ற பாரிய பிரச்சினைகள் இருக்கின்றது. எமது சபை சில விடயங்களில் ஈடுபடலாம் சில விடயங்களில் ஈடுபட

முடியாது. நாம் பொருளாதாரத்தை எடுத்துக் கொடுக்க முடியாது. மாற்றாக அவர்கள் பல்கலைக்கழக வாழ்கைக்கு போவதற்கு தயார் படுத்த முடியும். அதாவது சென்ற சபையில் சதாரணதரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு புலமைப்பரீசில் நிகழ்ச்சியென்று, கணனி, ஆங்கிலம், போன்ற வகுப்புகளை நடாத்தினோம். அதே போல் நான் கலாநிதி நஜீம் அவர்களிடம் அபிப்பிராயம் கேட்டுள்ளேன். BCAS பொறியியலாளரிடமும் பேசி எந்த விதத்தில் பிரதேச சபையும் அந்த நிறுவனங்களும் சேர்ந்து பல்களைக்கழகம் செல்வதற்குரிய மாணவர்களை தயார் படுத்தலாம் உன்று,

அதாவது ஆங்கிலம், சிங்களம், வகுப்புக்களை நாடாதுதல், பல்கலைக்கழகம் பற்றிய அறிவூட்டல் கருத்தரங்குகளை நடாத்துதல். அத்தோடு அவர்களது பொருளாதார நிலமைகளை ஆராய்ந்து ஒவ்வொரு பிரிவுகளிலும் அவர்களின் தகைமையை எடுத்து அவர்களுக்கு நாம் எந்த வகையில் உதவலாம்.? என்று பார்க்க வேண்டும். அந்த நேரத்தில் கௌரவ உறுப்பினர்களின் உதவியையும் நான் நாடுவேன். அந்தவகையில் 02 விடயங்கள் ஒன்று பயிற்சிப் பட்டறை நடாத்துவது. அடுத்து பல்கலைக்கழகம் போவதற்கு தகுதியில்லாத மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டல் கருத்தரங்குகளை சபையூடாக செய்ய வேண்டும். அதற்கு உங்களது ஒத்துழைப்புக்களும் வழிகாட்டல்களும் வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சுமார் 10 சம்மாந்துறை மாணவர்கள் அதிலும் அதிகமாக மருத்துவ பீடத்தில் இருக்கின்ற பிள்ளைகளுக்கு இரகசியமான முறையில் புலமைப்பரிசில் நிதி ஏற்பாடு செய்து கொடுத்திருக்கின்றேன். அதனை வெளிப்படுத்தவில்லை. காரணம் அவர்களது கௌரவம் சம்பந்தப்பட்ட விடயம். அதே போல் இந்த வருடமும் தகுதியான பிள்ளைகளை அடயாளம் கண்டு வழமையாக நான் செய்கின்றதை தொடர்ச்சியாக செய்வேன். இது அரசியலுக்கு வருவதற்கு முன்னரே நான் செய்த விடயங்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பயிற்சிப் பட்டறை மாத்திரம் வெளிப்டையாக செய்யலாம். மற்ற விடயங்கள் மறைமுகமாக செய்ய வேண்டும். காரணம் அவ்வாறு செய்தால் தான் அதில் ஒரு சிறப்பு இருக்கும். அவர்கள் ஏழைகள் என்ற விமர்சனத்தை வராமல் பாதுகாக்க வேண்டும்.

**தீர்மானம் 20**
பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களுக்கு பயிற்சிப் பட்டறை நடாத்துவதற்கும், பல்கலைக்கழகம் செல்வதற்கு பெறுபேறு போதாத மாணவர்களுக்கு வேறு என்ன வழிகளில் அவர்களது எதிகாலத்தை நோக்கிப் பயனிக்கலாம் என்ற கருத்தரங்குகளை BCAS நிறுவணத்துடன் இணைந்து நடாத்துவதற்கும் அன்றய தினம் கலந்து கொள்ளும் மாணவர்கள், வளவாளர்களுக்கு மதிய போசனம் வழங்கவும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வலயக் கல்வி அலுவலகத்தில் இருந்து எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு புலமைப்பரிசில பரீட்சைக்கு தோற்றவிருக்கும் தரம் 04 மாணவர்களுக்கு நிலையறி பரீட்சை ஒன்று நடாத்துவதற்கு தங்களிடம் இருந்து நிதி உதவி கோரியிருந்தோம். அதனை ஏற்று தங்களுக்கு தேவையான நிதியை வழங்கியதற்காக நன்றி நவில்தல் கடிதம் ஒன்று வந்துள்ளது. அது உங்கள் அனைவருக்கும் கிடைத்திருக்கும் என்று நினைக்கின்றேன்.

PSDG 2019 ஆம் ஆண்டுக்கான முன்மொழிவுகள் சில செய்துள்ளோம். மாற்று முன்மொழிவுகள் இருந்தால் நீங்கள் கூறலாம்.

**தீர்மானம் 21**

2019 ஆம் ஆண்டுக்கான கீழ்வரும் PSDG வேலைத்திட்டத்திற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

**வேலைகளின் விபரங்கள்**

01. Const. of Night Soil Treatment Plant at Compost Yard
02. Improvement of Treatment Plant Stage - III and Construction of Boundary Wall for Treatment Plant Veeramunai - 04
03. Const. of Filtering Unit for Malligaitivu Water Supply
04. Clading & Painting for Abdul Majeet Hall
05. Fixing & Laying Solar Power System for office Administrative Building

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்பர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

நீங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள். மல்லிகைத்தீவில் பலருக்கு கிட்ணி நோய் பிரச்சினை உள்ளது. காரணம் அவர்கள் உபயோகிக்கும் நீரில் கல்சியம் அதிகரித்து பாரிய விளைவுகளை மக்கள் எதிர்நோக்குகின்றார்கள். ஜெய்கா திட்டத்தின் மூலம் கினறு கட்டப்பட்டு குளோறின் மாத்திரம் போட்டு கொடுத்தார்கள். அம்மக்கள் உபயோகிக்கின்ற நீரால் பல பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. அதற்கு Treatmen Plant உருவாக்க வேண்டும். அல்லது நீர் வழங்கல் அமைச்சரிடம் சிபார்சு செய்து மல்லிகைத் தீவிற்கு நீர் கொண்டு செல்ல முயற்சிக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அங்கு இருப்பவர்களுக்கு மாத்திரமல்ல தொழிலுக்காக இங்கிருந்து அங்கு செல்பவர்களும் பாதிப்படைகின்றனர். அதற்கு ஒரு சிறந்த வழி செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கிழக்கு மாகாணம் அம்பாரை மாவட்டத்திலே குடிநீர் வசதியற்ற கிராமங்களுக்கான புதிய குளாய் நீர் பொருத்தல் வேலைத்திட்டம் ஒன்று சம்மாந்துறை தேசிய நீர் வழங்கள் வடிகால் அமைப்புச் சபையினால் முன்னெடுக்கப்பட்டு அதற்கான மதிப்பீட்டறிக்கைகள் தற்போது செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. எமது சபையினாலோ அல்லது தவிசாளர் அவர்களாலோ முடியுமாக இருந்தால் தேசிய நீர் வழங்கள் வடிகால் அமைப்புச் சபையின் கிழக்கு மாகாண பொது முகாமையாளரைத் தொடர்பு கொண்டு அதற்கான விடயங்களை மேற்கொள்ளலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நாம் தீர்மானமாக எடுத்து அவர்களுக்கு அனுப்பி வைப்போம்.

**தீர்மானம் 22**

மல்லிகைத்தீவு பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு குடி நீரைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் சிபார்சு செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, PSDG வேலைத்திட்டத்தில் இதனை ஒரு முன்மொழிவாக எடுத்து சமர்ப்பித்ததையிட்டு இந்த சந்தப்பத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். உண்மையில்

அப்பிரதேசத்திலே 185 மக்கள் தொகையும் ஏறக்குறைய 70 குடும்பங்களும்தான் வாழ்கின்றனர். இந் நீரின் தாக்கத்தினால் சிலர் நோயினால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளனர். சிலர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலே சிகிச்சை பெற்று வருகின்றனர். இதற்கான பிரதான காரணம் அந்தப் பிரதேசத்தைச் சுற்றி வயற்காணிகள் இருக்கின்றது. அதற்கு விசிறப்படும் கிருமிநாசினிகள் அவர்களைத் தாக்கிக் கொண்டிருக்கின்றது.

எனவே, இதற்காக மேற்கொள்கின்ற விடயம் சிறந்த வழியாகும். அந்தப் பிரதேசத்திற்கு குடி நீரை வினியோகிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன். அதற்கு மேலதிகமாக 02 வாரத்திற்கு ஒரு தடைவ பவுசர் மூலமாக குடிநீர் மாத்திரம் வினியோகித்தால் சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தேசிய நீர் வழங்கள் வடிகால் அமைப்புச் சபையிலே ஓர் அங்கீகாரம் இருக்கின்றது, குடிநீர் தற்காலிகமாக அல்லது அவசரமாக தேவைப்படுகின்ற பிரதேசத்திற்கு வரட்சி காலங்களில் பவுசர் மூலம் குடிநீர் வழங்கக்கூடிய ஒரு திட்டம் இருக்கின்றது. ஆகவே, மல்லிகைதீவு பிரதேசத்திலே இன்று இடம்பெற்றிருக்கின்ற சூழ்நிலையை கருத்தில் கொண்டு எங்களது சபையின் பங்களிப்பினூடாக அந்தக் குடி நீரை பவுசர் மூலமாக அவர்களுக்கு வழங்கக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்கான ஏற்பாடுகளை நாங்கள் செய்திருக்கின்றோம் இந்தக்கிழமை ஆரம்பிக்கலாம். தேசிய நீர் வழங்கள் வடிகால் அமைப்புச் சபையில் இருந்து நீரைப் பெற்று பவுசர் மூலமாக கிழமைக்கு 02 அல்லது 03 தரத்திற்கு அனுப்பக்கூடியதாக செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ. பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கினற்று நீரை எடுத்துவிட்டு தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற நீரை அதற்குள் செலுத்தினால் சிறப்பாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதனை நாம் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையிலே பேசலாம்.

'சுவாட்' அமைப்பினால் அனுப்பப்பட்ட கடிதம் அனைவருக்கும் கிடைக்கப்பெற்றுள்ளது. இதுபற்றி அங்கத்தவர்களின் கருத்துக்களை கேட்க விரும்புகின்றேன். காரணம் இது பொதுவான பிரச்சினை. சட்ட திட்டங்களும் இருக்கின்றன. இதனை எவ்வாறு கட்டுப்படுத்துவதென்பது உங்களது அபிப்பிராயங்களை தெரிய விரும்புகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இங்கு பாலர் பாடசாலை, மேலதிக நேர வகுப்புக்கள் தொடர்பாக கூறப்பட்டுள்ளது. அதில் பாலர்பாடசாலை பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றது. வலயக்கல்விப் பணிமனையில் அதற்காக தனியார் பனிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அதனை அரசாங்கம் அவர்களுக்குரிய சேவைகளை அதனூடாக முன்கொனடுக்கின்றது. அவர்கள் கிழக்கு மாகாணம் முழுவதும் அதனை நெறிப்படுத்தி செய்கின்ற அரச நிறுவனமாக இருக்கின்றது. சுவாட் அமைப்பின் கோரிக்கையின் பிரகாரம் செயற்படப் போவது பிரதேச சபையினுடைய சட்டதிட்டங்களுக்கு நாங்கள் பெறுப்புக் கூற வேண்டிய நிலை இருக்கின்றது. எனவே, எல்லாவற்றிலும் நாம் தலையிடுவது சிறப்பாக அமையாது என்று நான் நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் நான் தெளிவு படுத்த வேண்டும். இது சபையின் வழங்கள் பற்றியோ சபையின் தலையீடு பற்றியோ குறிப்பிடவில்லை. இந்த நிறுவனங்கள் இன்று வியாபாரமாக செய்யப்பட்டு வருகின்றது.

ஏதாவது ஒன்று செய்யும் போது சில சில விதிமுறைகளுக்குட்பட்டுத்தான் அவைகள் இயங்க வேண்டும். உதாரணமாக, 25 இற்கு மேற்பட்ட பிள்ளைகள் கல்விகற்றால் அங்கு 01 Toilet இருக்க வேண்டும். இது போன்ற கட்டுப்பாடுகள் இருப்பது அவசியமாகும். இவைகள் பற்றி நாம் ஒருவரும் கண்கானிப்பதில்லை. மேலதிக நேர வகுப்புக்கள் நடாத்தும் நிறுவனங்களில் எந்த விதமான கண்கானிப்பும் இல்லாமல் நடைபெறுகின்றது. இவைகள் தொடர்பாக நாம் கவனம் செலுத்துவதென்றால் என்னவிதத்தில் செய்யலாம் என்ற உங்களது அபிப்பிராயங்களைப் பெறுவதற்காகத்தான் இந்த சபையில் இதனை சமர்ப்பிக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, பாலர் பாடசாலைளில் இருந்துதான் எதிர்கால சம்மாந்துறை ஆரம்பிக்கின்றது. ஆனால் இன்று பிள்ளைகளை பாதுகாக்கின்ற நிறுவனமாக பாலர் பாடசாலைகளை பார்க்க முடியாமல் இருக்கின்றது. சிறுவர் உளவியல் கலாநிதி பட்டம் பெற்றவர்கள் கூறுகின்ற போது 05 வயதிற்கு முன்னால் சமூகத்தில் வாழ்கின்ற பிள்ளைகள் அந்தந்த சமூக சூழ்நிலைகளைக் கொண்டு அவர்கள் என்னவாக வர வேண்டும் என்ற வடிவமைப்பு முடிந்து விடுகின்றது. அந்தப் பிள்ளைகள் ஒரு விடயத்தை கற்றுக் கொள்கின்ற போது, அதாவது சிறு பராயத்தில் சேர்க்கப்படுகின்ற பாலர் பாடசாலை அமைந்திருக்கின்ற சூழ்நிலை, படித்துக் கொ:டுக்கின்ற ஆசிரியர்களுடைய மனோநிலைகள், அனுபவத்துடன் கூடிய கற்றுக் கொடுக்கின்ற ஆற்றல்கள் இவைகளைக் கொண்டுதான் எதிர்கால சமூகம் தீர்மானிக்கப்படுகின்றது.

உதாரணமாக பார்தால் பின்லாந்தில் உலகத்திலேயே மதிக்கத்தக்க தொழிலாக ஆசிரியர் தொழில் இருக்கின்றது. இது போன்று எத்தனையோ நாடுகள் கலாநிதி பட்டம் பெறுகின்ற ஆசிரியர்களையும், துறை சார்ந்தவர்களையும் அந்த நாட்டுக்கு அனுப்பி ஆசிரியர்களைச் சந்தித்து அந்த கலாபீடங்களில் எவ்வாறு கற்பித்தல் முறைமைகளைச் செய்கின்றார்கள் என்று பார்த்துக் கொண்டு வருகின்றார்கள். மிகவும் முக்கியமான தொழிலாக ஆசிரியர் தொழில் இருக்கின்றது. ஒவ்வொரு நிபுனத்துவர்களையும் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் சமூகத்தை வடிவமைக்கின்ற பொறுப்பு ஆசிரியர்களின் கைகளிலேயே இருக்கின்றது. அவ்வாறான ஆசிரியர்களை உருவாக்ககூடிய இடம்தான் பாலர் பாடசாலை. அதில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள், எமது சபையினால் நடாத்தப்படுகின்ற பாலர் பாடசாலை ஆசிரியர்களையும் உட்பட அனைவரும் உரிய தரத்தில் இருக்கினறார்களா? என்று பார்க்க வேண்டும்.

மேலதிகமாக நமது ஊரை சீர்படுத்த வேண்டிய பொறுப்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், கட்சிதலைவர்கள், மற்றும் உயர் பிரமுகர்கள், நம்பிக்கையாளர் சபை, மஜிலிஸ் அஸ்ஸூறா இவைகளுக்கு அப்பால் இங்கு இருக்கின்ற கொளரவ தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள் மக்கள் தெரிவில் வந்தவர்கள். எங்களுக்கு அந்தப் பொறுப்பைத் தந்திருக்கின்றார்கள். இந்த ஊர் விடயத்தில் அடிமட்டம் சென்று அக்கரையுடன் செயற்பட வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கின்றது. அந்தவகையில் அவைகள் ஒவ்வொன்றும் உரிய முறையில் உரிய வசதிகளுடன் இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் பாடசாலைகளை எடுத்துக் கொண்டாலும் பிள்ளைகள் விளையாடுவதற்க்கூட இடவசதியில்லாமலும், சுகாதாரம் சரியான முறையில் பேனப்படாமலும் இருக்கின்றது. எனவே எங்களுடைய சமூகம் பாலர் பாபடசாலை விடயங்களில் அவைகள் அதனை நடாத்தக்கூடிய போதுமான இடவசதிகள் இருக்கின்றதா என்று பார்ப்பதற்கு இந்த சபைக்கு முழு அதிகாரமும் இருக்கின்றது.

அதாவது இவர்கள் பணத்தை அறவிடுகின்ற நிறுவனமாக இருந்தால் அவர்கள் அனைவரும் எங்களிடம் சட்டத்தின் கீழ் பதியப்பட்டிருக்கின்றார்களா என்பதைப் பார்க்க வேண்டும். இல்லை என்றால் அதறிகுரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். கல்வி கற்க செல்கின்ற சிறுவர்களுக்கு உள நலத்திற்கு தகுதியான ஆசிரியர்களாக இருப்பதோடு, ஒழுக்க விழுமியங்களையும் கற்றுக் கொடுக்கக்கூடிய ஆசிரியர்களாக இருக்க வேண்டும். இந்த விடயத்தில் சுவாட் அமைப்பு அக்கரை செலுத்துகின்றதென்றால் அவர்களும் இந்த சந்தப்பத்தில் பாராட்டப்பட வேண்டும். மேலதிகமாக பாலர் பாடசாலை விடயத்துடன் சேர்த்து கல்வி நிறுவனம், மேலதிக நேர வகுப்புக்கள் கண்டிப்பான முறையில் கண்கானிக்கப்பட வேண்டிய நிறுவனமாக இருந்து கொண்டிருக்கின்றது. அந்த விடயத்தில் கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக நின்று

கல்வி நிறுவனங்கள், மேலதிக நேர வருப்புக்கள், பாலர் பாடசாலைகள் சீராக அமைக்கப்படுவதுடன், அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களை கவனத்தில் கொள்வதில் இந்த சபை மிக மும்மூரமாக முன்னெடுக்க வேண்டும் என்று நான் இந்த சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்களின் கருத்தை உள்வாங்கியவளாக எனது கருத்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். இன்று சம்மாந்துறையில் 82 பாலர் பாடசாலைகள் காணப்படுகின்றது. ஆரம்ப காலத்தில் பாலர் பாடசாலைக்ள வீட்டுக்கு வீடாக உருவாக்கப்பட்டது உண்மையான கருத்துத்தான். ஆனால் அந்த நேரம் சாதாரன தரப் பரீட்சையில் சித்தி பெறாதவர்களும் பாலர் பாடசாலை நடாத்தி வந்தார்கள். ஆனால் இன்று வலயக்கல்வி அலுவலகத்திலும் பணிப்பாளர்கள் நியமித்திருக்கின்றார்கள். அதே போன்று பீறோவிலும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களினூடாக பாலர் பாடசாலைகள் பார்வையிடப்படுகின்றது. அது மட்டுமின்றி அவர்களுக்கு தற்காலத்தில் எவ்வாறு பாடசாலை அமைய வேண்டும், ஆசிரியர்கள் பிள்ளைகளைப் எவ்வாறு பராமரிக்க வேண்டும் போன்ற விடயம் தொடர்பான பயிற்சிப் பட்டறைகள் நடாத்திக் கொண்டே வருகின்றனர்.

ஆனால் சில ஆசிரியர்களுக்கு குண இயல்புகள் இருக்கலாம். அவர்கள் கண்டிப்பாக அவைகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். காரணம் பாலர் பாடசாலை ஆசிரியர் என்பவள் ஒரு தாய். நீங்கள் தற்போதுள்ள பாலர் பாடசாலைகளுக்கு சென்று பார்தால் உங்களுக்குத் தெரியும் அவர்கள் புன் சிரிப்புடன், பிள்ளைகளுடன் அரவனைப்புடன் நல்ல முறையில் அனுகுவார்கள். காரணம் அவ்வாறான பயிற்சிகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. எனவே சபையினால் முடிந்தால் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு ஓர் பயிற்சிப் பட்டறை நடாத்தலாம் என்று நான் இவ்விடத்தில் தெரிவிக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இவ்விடயம் பற்றி இவ்விடத்தில் உரையாற்ற வேண்டி இருக்கின்றது. காரணம் நானும் சில காலம் முன்பள்ளி பாலர் பாடசாலை உதவிப் பணிப்பாளராக தற்காலிகமாக கடமையாற்றியிருந்தேன். நமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்கள் கூறியதையும், கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் கூறியதிலும் ஒரு விடயத்தைக் காணலாம். ஆரம்ப கல்விதான் அத்திவாரம். ஆரம்ப காலங்களில் சில குறைபாடுகள் இருந்தது. ஆனால் தற்காலத்தில் பயிற்சிகள் வழங்கப்பட்டு அவைகள் குறைந்துள்ளது. ஆனால் இவர்கள் கூறியவாறு பின்லாந்து போன்ற நாடுகளில் மாணவர்கள் 07 வயதிற்குப் பிறகுதான் கற்றல் நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றனர். அதற்கு முன் மாணவர்களின் விருப்பமான இசை விளையாட்டு போன்ற முறை மூலம் தான் கல்வி கற்கின்றனர்.

தற்போது மேற்கத்திய நாடு போல் முன்னேறி வந்தாலும், பிள்ளைகள் கற்கின்ற இடங்களை பொருத்தமான சூழலைக் கொண்டுள்ளதா? என்று நாம் கண்டிப்பாக பார்க வேண்டும். பாலர் பாடசாலை மாணவர்கள் விரும்புகினற நிலயங்களாக இருக்கின்றதா? அல்லது திணிக்கப்பட்டு கற்பிக்கின்ற நிலையங்களாக இருக்கின்றதா? என்பதைப் பார்ப்பது எமது முக்கியமான நோக்கமாக இருக்க வேண்டும். இவ்விடயம் சபைக்கு வந்ததனால் ஆரம்பக் கல்வியில் குழு ஒன்றையாவது அமைத்து இவைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கொண்டு புதிய திட்டங்களை அதாவது வெளிநாடுகளில் இருக்கின்ற அமைப்பு போல் கல்விமுறைகளை அனுக வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கிழக்கு மாகாண பாலர் பாடசாலை பணியகத்தில் வெளிக்கள உத்தியோகத்தர் இந்தப் பகுதிக்கு பொறுப்பாக இருக்கின்றார். பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு ஒரு கொடுப்பனவு கொடுப்பதற்காக சகல பாடசாலைகளுக்கும் கள விஜயம் மேற்கொண்டு அவர்களின் சிபார்சின் அடிப்படையில்தான், இப்போது கொடுப்பனவுகள் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பாலர் பாடசாலை பணியகத்தின் மேற்பார்வை உத்தியோகத்தராக நான் மாகாண சபையில் இருக்கின்ற போது கடமையாற்றி இருக்கின்றேன். இங்கு சொல்லப்பட்ட

விடயங்கள் அனைத்தும் உள்வாங்கப்பட்டிருக்கின்றது. ஒரே ஒரு குறைபாடு நமது பகுதியில் இருக்கின்றது. என்னவென்றால் பாலர் பாடசாலைகள் அமைந்துள்ள சூழல்கள். மாட்டுக் கொட்டில் அருகில், வீட்டின் ஓர் அறையில், முற்றம் போன்ற இடங்களில் பிள்ளைகள் சுவாசிப்பதற்குக் கூட சிரமப்படுகின்றவாறு அமைந்திருக்கின்றது.

ஆகவே, அதனை ஒழுங்குபடுத்துகின்ற தேவை இந்த சபைக்கு இருக்கின்றது. இதனை கொண்டு வந்த சுவாட் அமைப்பிற்கு நாங்கள் நன்றி தெரிவிக்க வேண்டும். எனவே, ஒரு குழுவை அமைத்து சகல பாலர் பாடசாலைகளுக்கும் சென்று நேரடியாக பார்வையிட்டு அதற்குப்பிறகு நாங்கள் இதனை விரிவாக ஆராய்ந்து ஒரு முடிவை எடுக்க வேண்டும். அதே நேரம் தனியார் கல்வி நிறுவனங்களையும் பொறுத்த வரையில் அவர்களும் அதிகமாக பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

சம்மாந்துறை பிள்ளைகள் கல்வியில் முன்னேறுவதற்கு அவர்களும் ஒரு காரணமாக இருக்கின்றார்கள். ஆனால் அவைகள் அமைந்துள்ள சூழலையும், நடைமுறைகளையும் நாங்கள் பார்க்க வேண்டி இருக்கின்றது. எனவே இந்த சபையில் குழு ஒன்றை அமைத்து பாலர் பாடசாலை, தனியார் கல்வி நிறுவனங்களுக்கு கள விஜயம் மேற்கொண்டு அங்கே அவதானித்தவற்றை மீண்டும் இந்த சபையிலே கொண்டுவந்து தீர்மானம் எடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று கூறிக் கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் இந்த இடத்தில் சுவாட் அமைப்பை விட கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்றால் பாலர் பாடசாலையின் அத்தியவசியத் தேவை பற்றி அவர் தெளிவான விளக்கத்தினை கொடுத்திருந்தார். இந்த இடத்தில் கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களும் இறுதியாக கூறிய விடயம் நாம் கள விஜயம் செய்து ஒவ்வொரு பாலர் பாடசாலைகளை ஆய்வு செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்பதும் வரவேற்கத்தக் விடயமாக இருக்கின்றது.

சபை ஆரம்பித்து ஒரு சில வாரங்களில் நான் 02 பாலர் பாடசாலைகளை பிரதேச சபைக்குள் உள்வாங்கித் தாருங்கள் என்ற கோரிக்கையை முன்வைதபோது பாலர் பாடசாலைகளை பிரதேச சபை நடாத்துவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் ஒரு கருத்தினைத் தெரிவித்திருந்தீர்கள். அதனை நான் ஏற்றுக் கொண்டேன். தற்போது கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கூறியதன் படி அன்மையில் பாலர் பாடசாலை ஒன்றின் ஒளிவிழா என்ற நிகழ்ச்சிக்கு அழைத்தார்கள். ஒளிவிழா என்றால் திறனாய்வு, கலை கலாசார நிகழ்வுகள் தான் இடம் பெறும் என்று நினைத்து அவ்விடத்திறகு சேன்றேன். ஆனால் அந்நிகழ்சிகள் முழுவதும் கிறிஸ்தவ மதம் சம்பந்தமான நிகள்சிகளாகவே இருந்தது. இதனை உங்களது நத்தார் பண்டிகை கிறிஸ்தவ நிகழ்வு என்று கூறியிருக்கலாம் என்று கூறிவிட்டு வந்தேன்.

இதே போன்று இஸ்மாயில் புர பாலர் பாடசாலையை தனியாக சுகந்தி எனும் நபர் நடாத்தி வருகின்றார். அவரை அவ்விடத்தில் இருந்து அகற்ற வேண்டும் என்றும் தனது பிள்ளையை அவ்விடத்தில் ஆசிரியராக்க வேண்டும். என்ற முயற்சியினால் ஆசிரியையிடம் நாங்கள் எங்களது பிள்ளைகளுக்கு எங்களது மதத்தையும் ஒழுக்கத்தையும் கற்றுக் கொடுக்க வேண்டும் ஆகவே நீங்கள் இங்கு கற்பிக்கக் கூடாது என்று கூறியிருக்கின்றார்கள். இவ்வாறான பல பிரச்சினைகளுக்கு எங்களது கருத்துக்களைக் கூறினால் நாங்கள் குளப்பவாதிகளாக ஆகின்றோம். மக்கள் எங்களிடம் கூறுகின்ற பிரச்சினைகளை ஆராயச் செல்கின்ற போது எங்களுக்கு எங்களது கருத்துக்களை கூற முடியாமல் உள்ளது. எங்களுக்கு முறையான அங்கீகாரம் இல்லை என்பது எங்களுக்கு வேதனைக்குரிய விடயமாக இருக்கின்றது.

பழைய வளத்தாப்பிட்டியில் ஒரு பாலர் பாடசாலை இருக்கின்றது அங்கு குடிப்பதற்கு நீர் வசதிகள் இல்லை, மலசலகூட வசதிகள் இல்லை. அதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருந்தும் அவ்வேலைகள் செய்யவில்லை. இவைகளை நாங்கள் கேட்கப்போனால் நாங்கள் அவர்களுக்கு எதிரியாகின்றோம். எங்களை பெலீசில் முறையிடுகின்றனர். இதுதான் எங்களுக்கு இருக்கின்ற நிலைப்பாடு. நாங்கள்

சமூகத்திற்காக செயற்பட வந்தவர்கள். இதற்கெல்லாம் சரியான முடிவு என்னவென்றால், எங்களுக்கு சரியான பாதுகாப்பு அல்லது அங்கீகாரம் கிடைக்க வேண்டும். இந்த மட்டத்தில் அல்ல அதற்கான அங்கீகாரம், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அல்லது சிரேஸ்ட்ட பொலிஸ் அத்தியட்சகரூடாக எங்களது பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி உட்பட அத்தனை பேரையும் கொண்டு வந்து இவ்விடத்திலே ஒரு கலந்துரையாடலை ஏற்படு செய்ய வேண்டும்.

ஒவ்வொரு வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்கும் போதும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வருகின்றது. உண்மையில் கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் கூறியது போன்று அறிவுரைகளைக் கூறலாமே தவிர; அவைகளை நிறுத்த முடியாது. எனவே, இவைகளுக்கு ஒரு தீர்வு காணவேண்டும். எனது வட்டாரத்தில் எந்த ஒரு திட்டமும் இல்லாமல் பல வேலைகள் குறைபாடுகளுடன் செய்யப்படுகின்றது. நியாயமான கருத்துக்களைச் சொல்வதென்றாலும் அச்சப்பட்டுக் கொண்டு சொல்ல வேண்டிய நிலை எங்களுக்கு இருக்கின்றது. என்னைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு பிரச்சினைகளையும் மேல் இடங்களுக்குச் சென்று அவைகளைச் சீர் செய்து கொண்டேன். இதேபோன்று இங்குள்ள ஏனைய சில உறுப்பினர்களுடன் மோதமாட்டார்கள். ஆனால் எங்களைப் போன்ற சாதாரன உறுப்பினர்களுடன்தான் மோதுகின்றார்கள். நான் யாரையும் மனம் நோகும்படியோ அல்லது அவர்களைத் தாக்கியோ பேசவில்லை. அனைவரும் ஒன்றினைந்து இவைகளைக் கட்டிக்காக்க வேண்டும். ஆனால் எங்களுக்கான அங்கீகாரம் சரியான வகையில் இருக்க வேண்டும். இதற்கு தவிசாளர் அவர்கள் சரியான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அனைவரது கருத்துக்களைனயும் உள்வாங்கியவனாக, இது 11வது அமர்வு முதல் அமர்வில் இருந்து இன்று வரை இந்த சபையின் கூட்டக்குறிப்புகளை உள்வாங்கியவர்களாக இருந்தால் நிச்சயமாக உங்கள் கருத்துக்கள் இதை விட வேறு விதத்தில் இருந்திருக்க வேண்டும் என்பது எனது கருத்து ஏனென்றால் இந்த சபையின் அங்கத்தவர்களுக்கு நமது பிரதேச சபையின் சட்டத்திற்குள்தான் அதிகாரம் இருக்கின்றது. அதனை எவ்வாறு நாம் உபயோகிக்க வேண்டும் என்பது பற்றி மிகவும் கவனமாக கையெடுக்க வேண்டிய விடயம். காரணம் சில இடங்களில் நாம் நேரடியாக கருத்துக்களைக் கூற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கலாம். ஆனால் சபை என்ற ரீதியில் அதனை உத்தியோக பூர்வமாக நாம் முன்வைக்கும்போது உறுதிப்படுத்தப்படுகின்றது.

உதாரணக, ஒரு பாதை பிழையாக செய்யப்படுகின்றதென்றால் அதனை உத்தியோக பூர்வமாக சபையூடாக அறிவிக்கும் போது நிச்சயமாக அவை திருத்தப்பட வேண்டும். ஆனால் அந்த இடத்தில் சந்தப்ப சூழ்நிலைகளுக்கு எற்றவாறு நாம் நடந்தால்தான் அதற்கான பாதுகாப்பையோ, கௌரவத்தையோ பெற முடியும். சபையின் செயல்கள் பிரதேச சபையின் சட்டத்தின் கீழ் வரும் சகலவிடயங்களிலும் உங்களின் கருத்துக்களை தெரிவிப்பது மட்டுமல்ல அதனைச் சீர் திருத்துவதற்கும் சகல அதிகாரங்களும் உங்களுக்கு உண்டு. ஆனால் அதனை சபையூடாக செய்யும் போது சட்டமாக மாறுகின்றது.

பாலர் பாடசாலைகளை மாத்திரம் பெரும்பான்மையாகப் பேசுகின்றோம். அது மாத்திரமல்ல மேலதிக நேர வகுப்புக்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. பேராசிரியை பர்வின் சுல்தான அன்று இளம் மாணவியாக பேசும் போது ‘தொண்டாக இருந்தது தற்போது தொழிலாக மாறிவிட்டது.’ என்று கூறுகின்றார். தொழிலாக வரும் போது, பாலர் பாடசாலை, மேலதிக நேர வகுப்புக்களின் பொதுச் சுகாதாரம், பொது வசதிகளை மேற்பார்வை செய்ய வேண்டிய கடமை இந்த சபைக்கு இருக்கின்றது.

நாம் மாகான சபையின் பிரதிநிதி, வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதி நிதி பாலர் பாடசாலைப் பணியக பிரதிநிதி மற்றும் உறுப்பினர்கள் இணைந்து ஒரு குழுவாக ஒவ்வொரு நிறுவனத்திற்கும் விஜயம் செய்ய வேண்டும் முதலில் அவர்கள் கட்டணம் அறவிடுவதென்றால் சபையில் வியாபார அனுமதிப்பத்திரம் எடுக்க வேண்டும். அவை எடுக்கும் போது சில விதிமுறைகள் இருக்கின்றது. சுகாதார வசதிகள் அதாவது முக்கியமாக 40,50 பெண் பிள்ளைகளுக்கு ஒரு மலசல கூடம் என்றால் பாரிய சிக்கல்கள் வரலாம். அவைகளைக் கட்டுப்படுத்துவது நமது கடமை. எனவே

இவைகளை உள்வாங்கி கல்வித்துறையில் நம்மிடம் மூத்த ஒருவர் இருக்கின்றார். நானும் ஒரு ஆசிரியராக இருந்திருக்கின்றேன். எனது கூடிய கவனம் ஆரம்ப கல்வியில்தான் இருந்தது.

பாலர் பாடசாலை ஆசிரியர்கள் 02 வது தாய். அந்தக் குணாம்சம் இல்லாதவர்கள் பாலர் பாடசாலைகளுக்கு போககூடாது. அதனால் கௌரவ அச்சி முஹம்மட்டின் தலைமையில் குழு ஒன்றை அமைத்து சுகாதார வைத்திய அதிகாரி, வலயக் கல்வி அலுவலகம் மற்றும் மாகாண சபை பிரதி நிதியும் இணைந்து அவர்கள் கள விஜயம் செய்து அங்குள்ள குறைபாடுகளை கண்டுபிடித்து அவைகளை ஆவணப்படுத்தி சீராக செய்ய வேண்டும். எனவே, அந்தக் குழுவில் அங்கத்தவர்களாக விரும்பும் உறுப்பினர்கள் கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் அவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். அவரின் தலைமையில் இதனை எவ்வாறு சீர் திருத்துவதென்று அடுத்த அமர்விற்கு முதல் இந்த சபைக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

கௌரவம், பொலிஸ் பாதுகாப்பு நிச்சயமாக நான் உத்தியோக பூர்வமாக மாகாணத்தின் DIGயுடன் பேசி அனைத்து பெலிஸ் நிலையங்களுக்கும் அந்த விடயங்கள் பற்றி எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும் என்றும், அந்தந்த ASP ஊடாக OIC, அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து பேசி ஒரு புரிந்துனர்வுக்கு வர வேண்டும். அவர்களும் மக்களின் பிரதி நிதிகளின் கருத்துக்களை உள்வாங்க வேண்டும். பட்டம் பதவிகளை வைத்து நாம் எவ்வாறு சமூகத்துடன் நடக்கின்றோமோ அதன் மூலம்தான் நமக்கு கௌரவம் கிடைக்கும்.

திண்மக்கழிவு தொடர்பாக புறக்கனிக்கின்ற உணர்வு உங்களுக்குள் இருக்கலாம். ஆனால் நீங்கள் சிந்திக்க வேண்டும், இந்த சபையின் வளங்களை வைத்துத்தான் நாம் சேவைகளைச் செய்யலாம். சபைக்கு வருகின்ற சில வருமாணங்களை வைத்துத்தான் நாம் சேவைகளைச் செய்து கோண்டு இருக்கின்றோம். திண்மக்கழிவு சேவையை ஊர் முழுவதும் செய்வதென்றால் வளங்களைத் தேட வேண்டும். அவைகள் பிரிவினையால்தான் வரும் என்ற கூற்றுக்கு நான் உடன்பாடு இல்லை. அவை நமது ஒற்றுமையிலும் வரலாம். சில இடங்கள் விடப்பட்டதற்குக் காரணம் அவைகள் பாரிய நிலப்பரப்பில் இருக்கின்ற இடங்கள் என்பதனாலேயே தவிர; வறிய மக்கள் என்ற புறக்கனிப்பு இந்த சபைக்கு இல்லை. நமது ஊர் நமது தலைமையில் ஒரு முன்னுதாரணமாக இருக்கின்ற ஊராக இருக்க வேண்டும். அதற்கு உங்கள் அனைவரது ஒத்துழைப்புடன் நாம் வளங்களைத் தேடி முகாமைத்துவப்படுத்துவதற்கு நமது வருமானத்தை கூட்ட வேண்டும்.

தயவு செய்து இந்த சகைபயில் ஒரு பிரிவினைவாத அல்லது வித்தியாசமான முறையில் நடக்கின்றது என்ற எண்ணத்தைக் கொடுக்காதீர்கள். ஏனெனறால் அது உண்மைக்கு முரனானது. ஒரு பாதையில் 04 தூண்கள் இருந்தால் அவைகளுக்கு வீதி மின்விளக்கு போடாதுவிட்டால் பாரிய குறைபாடாக வருகின்றது. அவைகளை நீங்கள் என்னுடன் கலந்தாலோசித்து செய்ய வேண்டும்.

இந்த சபையில் அரசியல் எந்த ஒரு இடத்திலும் வரக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருக்கின்றேன். காரணம் நமது சபை ஊருக்காக செயற்பட வேண்டும். இது நமக்குக் கிடைத்த ஒரு அமானிதம். இந்த சபையில் இருந்து வெளியே போகும் போது நாம் கட்சிக்கப்பால் ஊருக்காக செயற்பட்டோம் என்ற என்னத்துடன் வெளியேற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். இந்த சபையின் தீர்மானங்கள் 02 அல்லது 03 நாட்களுக்குள் செயற்படுத்தப்படுகின்றது. அதில் ஏதாவது தாமதங்கள் இருந்தால் நீங்கள் என்னிடம் அல்லது செயலாளரிடம் கூறி அதனை செயற்படுத்துவதற்கு நீங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பாதைகள் செய்கின்ற போது இருமருங்கிலும் கான்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவைகளைச் செய்த பிற்பாடு பாதைகள் செய்யப்பட வேண்டும் என்று சென்ற அமர்வில் பேசியிருந்தேன் அது தொடர்பாக ஏதாவது செய்யப்பட்டதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

VDP செய்து அதில் தாழ்வு இருக்கின்ற பகுதிகளில் முக்கியமாக கான் செய் வேண்டும். அதனை நாம் ஆராய்ந்து செய்ய வேண்டும் தீர்மானமாக எடுத்து அனுப்பலாம்.

**தீர்மானம் 23**

பாதைகளுக்கான திட்டமிடல்கள் செய்யப்படுகின்ற போது முதலில் இரு பக்கங்களுக்கும் கான்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**தீர்மானம் 24**

பயிற்சிக்காக பயிலுனர்களாக வரும் மேலதிகமான அபயிலுனர்களுக்கு சோலை வரி பணிகளைத் துரிதப்படுத்த (K படிவம் தயாரித்தல்) 03 மாத காலத்திற்கு ஊக்கு விப்பாக ஒரு நாளைக்கு 300 ரூபா வீதம் கொடுப்பனவு வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்பர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இந்த சபையின் நடவடிக்கைகள் இனிதே முடிகின்றது.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.